Computer Today ISSN 1391-6831 ஒகஸ்ட் - டிசம்பர் 2004

கம்ப்யூட்டர் ருடே

கணினிப் பிரியர்களின் கனவுச் சஞ்சிகை

மலர் 04 இதழ் 06 தகவல் தொழில்நுட்ப மாத இதழ்

வேல்ட்வைட்வெப் கண்டு பிடித்த தீமொதி ஜோன் பெனர்ஸ் - லீ!

பில் கேட்ஸின் வாழ்க்கை வரலாறு

ஜாக்கிரதை மெயிலில் வைரஸ்

இலங்கையின் முதலாவது தேசிய தமிழ் கணினிச் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணினியில் தாய்மொழியைப் பயன்படுத்த உதவும் தமிழ் விசைப்பலகையை இலங்கை பிரதமர் வெளியிட்டார்

அனைத்து இலங்கையரும் தகவல் தொழில்நுட்பத்தை தமது தாய் மொழியில் பயன்படுத்தக்கூடிய சூழலை



உருவாக்குவது, கணினி இயந்திரங்களில் மட்டுமல்லாது கையடக்க தொலை பேசிகள், DVD மற்றும் வீடியோ இயந்திர சாதனங்களிலும் தாய்மொழியைப் பயன்படுத்த வகை செய்வது, தமிழிலும், சிங்களத்திலும் தரவுத் தளங்கள் அமைப்பது போன்ற நோக்கங்களைக் கொண்டு செயல்பட்டு வரும் அமைப்பு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை நிலையம் (ICTA).

இந்த இலக்கினை நோக்கிய நீண்ட பயணத்தின் முதல்படியாக தமிழ், சிங்கள விசைப்பலகைகள் அண்மையில் இலங்கைப் பிரதமர், மகிந்த ராஜபக்ஷ அவர்களால் வெளியிடப்பட்டன.

இந்த விசைப்பலகை உருவாக்கல் முயற்சிகள் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை நிலையம் (ICTA) மேற்கொண்டுள்ள நீண்ட பயணத்தின் முதல்படியாக அமைகின்றன

பாடசாலை மாணவர்கள் தமிழிலும் சிங்களத்திலும் பாடங்களை கணினி மூலம் கற்றல், தமிழ், சிங்கள மொழிகளில் அமைந்த பல இணையத்தளங்களை உருவாக்குதல், அரச திணைக்களங்களின் ஆவணங்களை தமிழில் வெளியிடுதல்- பூர்த்தி செய்தல், வியாபாரிகள் தமது கணக்கியல் செயற்பாடுகளை சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் பேணுதல் ஆகிய பணிகளுக்கு இந்த விசைப்பலகைகள் பேருதவியாக அமையும்.



இலங்கையில் வெளியிடப்பட்ட தமிழ் விசைப்பலகை, 1999ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற தமிழ் இணைய மாநாட்டின் போது, தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட தமிழ்99 விசைப்பலகையின் வடிவத்தை ஒத்தது.

உயிர் எழுத்தும் மெய் எழுத்தும் சேர்ந்து தமிழ்நெடுங்கணக்கு எழுத்துருவாக்கத்தை அடிப்படையாக கொண்டது.

தமிழ் ஒலியியலை அடிப்படையாகச் கொண்டது.

உதாரணமாக கு என்ற எழுத்தை க + உ என உள்ளிடுவதன் மூலம் பெறமுடியும்.

இந்த தமிழ் விசைப்பலகை அனுபவம் வாய்ந்த தட்டச்சாளர்கள் இலகுவில் கற்றுக் கொள்ளக் கூடியது.

இந்த விசைப்பலகையின் இறுதி வடிவம் தொடர்பாக யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் கருத்தரங்குகளும் செயலமர்வுகளும் நடைபெற்றன.இந்த நிகழ்வுகளின்போது புதிய மற்றும் தமிழ் இலக்கணத்தை அடிப்படையாக கொண்ட ஒரு விசைப்பலகை அறிமுகப் படுத்தப்பட வேண்டும் என பலராலும் வலியுறுத்தப்பட்டது.

அரசாங்க சட்டவரைஞர் அலுவலகத்தில் நடாத் தப்பட்ட பரீட்சார்த்த செயல் திட்டத்தின்போது சாதாரண தட்டச்சாளர்கள் இந்த நடைமுறையை இலகுவாக பின்பற்றலாம் என ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மும்மொழியில் அமைந்த விசைப் பலகைஅரச திணைக்களங்களில் மூன்று மொழிகளிலும் பணியாற்றுபவர்களுக்கு ஏற்றவகையில் அமைக்கப்பட்டுள்ளது.

தகவல்:
- ஜெ.யோகராஜ், இலங்கை.
(ICT - Agency)

கம்ப்யூட்டர் ருடே

கணினிப் பிரியர்களின் கனவுச் சஞ்சிகை

அச்சிட்டு வெளியிடுபவர்கள் : நிலவு.com
No.4 C 6 -1/1, Fussels Lane, Col-06.
தொலைபேசி : 011 2 362112

ஆசிரியபீடம் -
ஆசிரியர் : சி.அனுராஜ்
இணை ஆசிரியர் : எஸ்.பிரதீப்

ஆசிரியர் குழு :
ப்ளஸ், ஜேனா, ஆதி, கார்த்தி, மாது, இணையன், கஜேன், சிலந்தி, மணி.

கம்ப்யூட்டர் ருடே யில் பிரசுரமாகும் ஆக்கங்களை ஆசிரியரின் அனுமதியின்றி பகுதியாகவோ முழுமையாகவோ மறுபிரசுரம் செய்ய இயலாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்ப்யூட்டர் ருடே

ஓகஸ்ட் - டிசம்பர் 2004

வாசகர்களுக்கு வணக்கம் !

"கரைகள் தூங்க விரும்பினாலும்
அலைகள் விடுவதில்லை
மரங்கள் ஓய்வை விரும்பினாலும்
காற்று விடுவதில்லை
ஓடி ஓடி ஒளிந்த போதும்
வாழ்க்கை விடுவதில்லை."

அதே போல்தான் இப்போது "**கம்ப்யூட்டர் ருடே**" ஆகிய எங்களது நிலைமையும்.

"நாங்கள் ஓய்வை விரும்பினாலும்
நீங்கள் விடுவதாயில்லை."

பல பல பிரச்சினைகளுக்கு மத்தியில், பல பல தடங்கல்களுக்கு மத்தியில் இந்த "**கம்ப்யூட்டர் ருடே**" யின் பயணம் மீண்டும் ஆரம்பித்துள்ளது. "**கம்ப்யூட்டர் ருடே**" யின் வாசகர்களாகிய உங்கள் பல்லாயிரக்கணக்கான கடிதங்களும் தினமும் சிணுங்கும் தொலைபேசி அழைப்புக்களுமே (நேராக எமது அலுவலகம் வந்தவர்களும்) இந்த முயற்சியில் மீண்டும் எம்மை ஈடுபட வைத்துள்ளன என்பதே உண்மை.

அந்த வகையில் இந்த இதழானது புதுமெருகில் உங்கள் கைகளில் தவழ வருகின்றது. இந்த விடுபட்ட 4 மாதங்களுக்குமாக சேர்த்து "ஓகஸ்ட்-டிசம்பர்" இதழாக இந்த இதழ் அச்சிடப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் மாதம் ஒரு இதழ் என உங்கள் கைகளில் கிடைக்கும் (இல்லாவிட்டால் விடவா போகிறீர்கள்!).

வாசகர்களாகிய உங்களின் அன்புத் தொல்லைகளைக் கருத்திற்கொண்டு பல இடர்ப்பாடுகளுடன் தவித்துக் கொண்டிருந்த "**கம்ப்யூட்டர் ருடே**"ஐ பொறுப்பெடுத்து இது ஒரு மாதாந்த இதழாக வெளிவருவதற்கு உறுதியளித்திருக்கும் **நிலவு.com** நிறுவனத்தாரிற்கு ஆசிரியர் பீடத்தின் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் வாசர்களாகிய நீங்கள் தந்த உந்துதல் இன்றுபோல் என்றும் தொடர வேண்டும் என்றும் ஆசைப்படுகிறோம்.

அன்புடன்,
- ஆசிரியர்.

லேட்டஸ்ட்



Jappan NEC இன் Camera உடன் கூடிய தொலைபேசி

மேலுள்ள படத்தில் Jappan இன் மிகப் பெரிய இலத்திரனியல் நிறுவனமான NEC இன் புதிய தயாரிப்பான மிகச் சிறிய மெல்லிய தோற்றமுடைய மட்டை வடிவுடைய Camera உடன் கூடிய நடமாடும் தொலைபேசியை Mode! பெண் ஒருவர் விளம்பரப்படுத்துவதனை படத்தில் காண்கிறீர்கள். உலக சந்தையில் இதற்கு கிடைத்த கிராக்கியின் பயனாக இவ் நிறுவனத்தின் வருடாந்த இலாபமானது பல மடங்கு அதிகரித்திருப்பதாக அவர்களின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டு இருக்கிறது.

Skype Landlines

கணினிகளுக்கிடையிலான தொடர்பாடல் -நிமிடத்திற்கான கட்டணம் 2சதம்தான்



Skype நிறுவனமானது அதன் புதிய பரிமாணமான கணினிகளுக்கிடையிலான தொடர்பாடல் முறையினை மிகவும் சிக்கனமான கட்டணத்துடன் உபயோகிக்கத்தக்க முறையில் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்தொடர்பாடல் முறையானது அடிப்படையில் தொலைபேசி போன்ற அமைப்பினை உடையதெனினும் குறிப்பிட்ட சில இடங்களில் மட்டுமே அமெரிக்காவின் சில பகுதிகளில் உபயோகத்தில் உள்ளது. இதன் நிமிடத்திற்கான கட்டணம் 2சதம் மட்டுமே (அமெரிக்காவின் டொலரில்)

புரோசசர் திறனைக் கூட்டும் இன்டல் மென்பொருள்.

IV (IA 32 EL - Execution Layer)

விண்டோஸ் சூழலில் இட்டானியம் 2 புரோசசரின் திறனை அதிகரிக்கும் வகையில் மென்பொருளை வெளியிட்டுள்ளது இன்டல் நிறுவனம். இந்த IV (IA 32 EL - Execution Layer) மென்பொருள் 32 பிட் அப்ளிகேஷன்களை மேம்படுத்தும் எனக் கூறப்படுகிறது. மைக்ரோ சொப்ட் விண்டோஸ் சேவர் 2003 சேவிஸ்பக் 1-இல் இணைக்கப்பட்டுள்ள இம் மென்பொருளை மைக்ரோ சொப்ட் இணையத் தளத்திலிருந்து பதிவிறக்கிக்கொள்ளலாம் - (www.microsoft.com/windoesserver2003/64bit/ipf/default.mspx).

-கணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Apple LCD Monitor

அப்பிள் நிறுவனத்தின் எல்சிடி திரைகள்

அப்பிள் நிறுவனம் அண்மையில் மெல்லிய அலுமினியத்தால் ஆன மூன்று எல்சிடி திரைகளை வெளியிட்டது. 20, 23, 30 அங்குல விட்டத்துடன் வரும் டிஸ்ப்ளேக்கள் விரைவில் விற்பனைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவற்றில் இரண்டு ∴பயர்வயர் மற்றும் இரண்டு யுஎஸ்பி போட்கள் உள்ளிணைக்கப்பட்டிருக்கும்.

இத்திரைகளை லப்டொப் மற்றும் டெஸ்க்டொப் கணினிகளுடன் டிஜிட்டல் முறையில் இணைத்து இயக்குவதற்கு டிஜிட்டல் விசுவல் இடை முகப்பும் வழங்கப்படுகின்றது. மேலும் Tiger என்ற பெயரில் MAC OS இயக்கச் சூழலின் அடுத்த பதிப்பையும் வெளியிடப் போவதாக அப்பிள் நிறவனம் அறிவித்துள்ளது.



3D Monitor (முப்பரிமாண அமைப்புடைய மொனிட்டர்)



Stereo Graphics எனும் நிறுவனமானது Synthagram (சிந்தகிராம்)-204 டெஸ்க்ரொப் LCD வகையிலான 20" பரிமாணத்திலமைந்த முப்பரிமாண அமைப்புடைய மொனிட்டரை அறிமுகப் படுத்தியுள்ளது.

இவ்வகை மொனிட்டரானது, விளம்பரம் மற்றும் விளம்பர கண்காட்சி ஆகியவற்றினை கருத்தில் கொண்டு விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இம் மொனிட்டரானது அதிகூடிய Resolution அளவான (1600 x 1200) அளவினைக் கொண்டது.

Hi D Walkman mz - NHI

ஒரு ஜிகாபைட் சேமிப்பகத்துடன் Sony மியூசிக் பிளேயர்!



Sony நிறுவனம் புதிதாக ஒரு ஜிகாபைட் கொள்ளளவுடன் கூடிய மியூசிக் பிளேயரை வடிவமைத்துள்ளது.

பாடலை பதிவு செய்யக் கூடிய திறனையும் கொண்ட இப் பிளேயர் (Hi D Walkman mz - NHI) எனப் பெயரிடப்பட்டுள்ளது. 45 மணிநேரம் வரை தொடர்ந்து இசை வழங்கும் திறனை இது உடையது.

-அருள்

Intel Pentium M and Celeron M Proccessor

இன்டல் நிறுவனமானது குறைந்த வலுவினை நுகர்வு செய்யும் திறன் கொண்ட Intel Pentium M மற்றும் Intel celeron M புரோசசர்களை சந்தைக்கு விட்டுள்ளது. இது தனித்துவமாக சிறிய Notebook (Mini note book), sub - note book, table PC மற்றும் மிகச்சிறிய அளவிலான நடமாடும்போது எடுத்துச் செல்லத்தக்க கணினி வகைகளுக்கே சிறப்பாக வடிவமைக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜாவா ஸ்கிரிப்ட் ஜாலம்!

```
<html>
<head>
<title>New Page 1</title>
</head>
<body>
<SCRIPT language=JavaScript>

function lib2bwcheck(){
        this.ver=navigator.appVersion;
        this.agent=navigator.userAgent;
        this.dom=document.getElementById?1:0;
        this.opera5=this.agent.indexOf("Opera 5")>-1;
        this.ie5=(this.ver.indexOf("MSIE 5")>-1 && this.dom && !this.opera5)?1:0;
        this.ie6=(this.ver.indexOf("MSIE 6")>-1 && this.dom && !this.opera5)?1:0;
        this.ie4=(document.all && !this.dom && !this.opera5)?1:0;
        this.ie=this.ie4||this.ie5||this.ie6;
        this.mac=this.agent.indexOf("Mac")>-1;
        this.ns6=(this.dom && parseInt(this.ver) >= 5) ?1:0;
        this.ns4=(document.layers && !this.dom)?1:0;
        this.bw=(this.ie6 || this.ie5 || this.ie4 || this.ns4 || this.ns6 || this.opera5);
        return this;
}
var bw=new lib2bwcheck()
var px = bw.ns4||window.opera?"":"px";

function run() {
 var css, obj, nest, ooo;
 if ((document.all) && (!bw.opera5)) {
  movy = document.body.clientHeight-64;
  movx = document.body.clientWidth-50;
 } else {
  movx = window.innerWidth-50;
  movy = window.innerHeight-64;
 }
 if (t==maxitems) {
        x1 = Math.round(Math.random()*movx*(sxto-sxfrom)/100+movx*sxfrom/100);
        x2 = Math.round(Math.random()*movx*(sxto-sxfrom)/100+movx*sxfrom/100);
        y2 = Math.round(Math.random()*movy*(syto-syfrom)/100+movy*syfrom/100);
        if (x1==x2) x1++;
        for (var i=0; i<maxitems; i++) {
          ox[i] = x1;
          oy[i] = movy;
          ds[i] = 0;
        }
 }
 t = 0;
 for (var i=0; i<maxitems; i++) {
  if (ds[i]==0) {
        oy[i]-=yspeed;
        if (oy[i]<y2) {
                oy[i]=y2; ds[i]=1;
                sx[i] = Math.round(Math.random()*movx*(sdto-sdfrom)/100+movx*sdfrom/100);
                sy[i] = Math.round(Math.random()*movy*(sdto-sdfrom)/100+movy*sdfrom/100);
        }
```


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

```
        ox[i] = x2 + (x1-x2)*(oy[i]-y2)/(movy-y2);
    } else if (ds[i]<explode) {
        ox[i] = x2 + Math.round(Math.cos((explode-ds[i])*Math.PI/(2*explode))*sx[i]);
        oy[i] = y2 + Math.round(Math.cos((explode-ds[i])*Math.PI/(2*explode))*sy[i]);
        ds[i]++;
    } else {
        if (oy[i]<movy) {
            oy[i]+=yspeed;
            if (sx[i]==0) ox[i]=0; else ox[i]+=Math.round(Math.random()*xspeed*sx[i]/Math.abs(sx[i]));
        } else t++;
    }
    if (bw.ns4) {
        ooo = eval("document.s"+i);
        ooo.moveTo(ox[i], oy[i]);
    } else {
        obj = "s"+i; nest="";
        css=
bw.dom?document.getElementById(obj).style:bw.ie4?document.all[obj].style:bw.ns4?eval(nest+"document.layers."
+obj):0;
        css.left = ox[i]; css.top = oy[i];
    }
  }
  setTimeout("run()",tpause,"JavaScript");
}

var maxitems=20;
var sxfrom=30;
var sxto=60;
var syfrom=20;
var syto=50;
var sdfrom=-20;
var sdto=20;
var yspeed=8;
var xspeed=4;
var explode=24;
var pcol=Number(255).toString(16);
var tpause=20;
var schar=".";

var fontface = 0;
var fontsize = "6";
if (fontface==0) fontface = 'Arial, Helvetica, sans-serif';
  else if (fontface==1) fontface = 'Times New Roman, serif';
  else if (fontface==2) fontface = 'Courier New, Courier, mono';
  else if (fontface==3) fontface = 'Georgia, Times New Roman, Times, serif';
  else fontface = 'Verdana, Arial, Helvetica, sans-serif';

/*
var maxitems=20;
var sxfrom=30;
var sxto=60;
var syfrom=20;
var syto=50;
```

ஜாவா ஸ்கிரிப்ட் உதவியுடன் பல்வேறுபட்ட அசைவுறு அமைப்புக்களை வடிவமைத்துக்கொள்ள இயலும் என்பதை அறிந்திருப்பீர்கள். பொதுவாக இணையத் தளங்களை வடிவமைக்கையில் இவ்வித அசைவுறு காட்சிகள் இணைக்கப்படும்.

இவ்வாறு இணையப்பக்க வடிவமைப்பில் அசைவுறு காட்சிகளை அமைப்பதற்கென்று சிறப்பாக வடிவமைக்கப்பட்ட பல மென்பொருட்கள் இருப்பினும், ஜாவா ஸ்கிரிப்ட் கொண்டு வடிவமைக்கப்படும் அசைவுறு காட்சிகள் எளிமை, இலகுத்தன்மை வாய்ந்தவை.

இங்கே எழுத்துக்கோர்வை ஒன்றை வளைந்து நெளிந்து செல்லும் வண்ணம் அசைவுறச் செய்வதற்கான ஜாவா ஸ்கிரிப்ட் Coding தரப்பட்டுள்ளது.
இதனை அப்படியே Notepad இல் type செய்து .html கோப்பாக சேமித்து இயக்கிப்பாருங்கள்.
தேவையான பகுதிகளில் நீங்களும் மாற்றங்கள் செய்து பயன்படுத்திக்கொள்ளலாம். ஆயினும் சில பகுதிகள் மாற்றத்தகாதவையாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றில் மாற்றங்கள் செய்யின், முறையான வெளியீடு கிடைக்காமற் போகலாம்.
முக்கியமான விடயம் - வெளியீட்டைப் பார்வையிடுவதற்கு JVM உங்கள் கணினியில் உள்ளதா எனப் பரிசீலித்துக்கொள்ளுங்கள்.

(தொடர்ச்சி 27ஆம் பக்கத்தில்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெயில் வைரஸ் ஜாக்கிரதை



இணைய வைரஸ்களின் தொல்லை தாங்க முடியவில்லை என்று நீங்கள் நினைப்பது எமக்குப் புரிகிறது. இணையம் மூலம் அன்றாடம் எமக்கு வரும் வைரஸ்களைக் காவிவரும் மின்னஞ்சல்களைத்தான் கூறுகின்றேன். எமக்கு அன்றாடம் ஆயிரக்கணக்கில் வைரஸ்களைத் தாங்கி மின்னஞ்சல்கள் வருகின்றன.

ஒரு இணையத்தளத்தின் மின்னஞ்சல் முகவரி, அத் தளத்துக்கு வருகை தரும் வாசகர்களின் கணினிகளில் பெரும்பாலும் இருப்பதால் அவர்களது கணினிகள் மேற்படி மின்னஞ்சல் வைரஸ்களால் பாதிக்கப்படும் சமயங்களிலெல்லாம் அக்கணினிகளிலிருந்து ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கில் வைரஸ்களுடன் கூடிய மின்னஞ்சல்கள் அந்த இணையத்தளத்தின் தொடர்பு மின்னஞ்சல் முகவரிக்கு வருகின்றன.

இத்தகைய வைரஸ்கள் தரும் இன்னொரு இடைஞ்சல் என்னவென்றால், உங்கள் மின்னஞ்சல் முகவரியிலிருந்தே உங்களுக்கும் மற்றவர்களுக்கும் வைரஸ்களுடன் கூடிய மின்னஞ்சல்களை அனுப்பும். உங்கள் கணினி வைரஸால் பாதிக்கப்படாமலிருந்தாலும், பாதிக்கப்பட்ட கணினியொன்றில் உங்கள் முகவரி இருக்கும் பட்சத்தில் இது சாத்தியமாகின்றது.



சில வேளைகளில் இத்தகைய மின்னஞ்சல் வைரஸ்கள் பல தேவையற்ற இக்கட்டான நிலைகளை உங்களுக்கு ஏற்படுத்தி விடலாம். உதாரணமாக 'I Love You' என்று கூறிக்கொண்டு வரும் வைரஸ் தாங்கிய மின்னஞ்சல்கள் உங்களுக்குத் தெரிந்த - மரியாதைக்குரிய நபர்களுக்குச் சென்றுவிடலாம்.

பலருக்கு இந்த மின்னஞ்சல் வைரஸ்கள் பற்றிய போதிய அறிவு இல்லாதிருப்பதால் சில வேளைகளில் அவர்கள், நீங்கள் தான் வேண்டுமென்றே அவர்களுக்கு வைரஸ்களைத் தாங்கிய மின்னஞ்சல்களை அனுப்புவதாகக் கருதி விடலாம்.

எனவே, இத்தகைய மின்னஞ்சல் வைரஸ்களைப் பற்றியும் கணினி வைரஸ்களைப் பற்றியும் நீங்கள் பொதுவாகவேனும் அறிந்திருப்பது அவசியம். இத்தகைய வைரஸ்களைத் தாங்கி வரும் மின்னஞ்சல்களை அம்மின்னஞ்சல்கள் உங்களுக்குத் தெரிந்த மிக முக்கியமான நபர்களிடமிருந்து வந்தாலும் கூட திறந்து படித்திட முயன்று விடாதீர்கள். உடனேயே அழித்து விடுங்கள்.

அத்துடன் உங்கள் கணினிகளை வைரஸ்களுக்கு எதிராகப் பாதுகாக்க வைரஸ் எதிர்ப்பு மென்பொருட்களான Norton Anti virus அல்லது MacAfee Anti virus போன்றவற்றில் ஏதாவதொன்றை உங்கள் கணினிகளில் நிறுவிக் கொள்ளுங்கள். பலர் இவ்விதம் மேற்படி மென்பொருட்களை நிறுவியதும் தங்கள் வேலை முடிந்துவிட்டதென்று நினைத்து விடுகின்றார்கள்.



ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக வைரஸ்கள் உருவாகிப் பல்கிப் பெருகுவதால் மேற்படி மென்பொருள் நிறுவனங்கள் இத்தகைய புதிய வைரஸ்களை எதிர்க்கும் மேலதிக மென்பொருட்களை உருவாக்கித் தமது ஏற்கனவேயிருந்த மென்பொருட்களைத் திடமாக்குகின்றார்கள்.

அவற்றை, அவர்களது இணையத் தளங்களிருந்து இலவசமாகப் பெற்றுக்கொள்ளவும் வசதிகள் செய்து தருகின்றார்கள். எனவே நீங்கள் ஏற்கனவே உங்கள் கணினியில் நிறுவிய வைரஸ் எதிர்ப்பு மென்பொருட்களுக்குரிய புதிய மேலதிக இணைப்புக்களை (Updates) அவர்களது இணையத் தளங்களிலிருந்து இறக்கி, உங்கள் கணினிகளில் நிறுவிக் கொள்வது மிகவும் அவசியம்.

அத்துடன் அடிக்கடி வைரஸ் எதிர்ப்பு மென்பொருளை இயக்கி உங்கள் கணினிகளைச் சுத்தம் செய்து கொள்வதும் உபயோகமான பாதுகாப்பு முறையாகும். -பி.ரேணு

Web Designing

Dream Solutions (Pvt) Ltd.,
Contact : 011 2 362112

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.எஸ்.வேர்ட்

த.கார்த்திபன்

Shading Styles

Drawing Toolbar இல் உள்ள Fill Effects இல் காணப்படுகின்ற Shading Styles இல் உள்ள ஒவ்வொரு கட்டளைகளையும் தெரிவு செய்யும் போது Variants என்ற இடத்தில் எவ்வாறு தெரியவரும் என்பதை படங்களுடன் விரிவாகப் பார்ப்போம்.

Horizontal



Vertical



Diagona up



Diagona down



From center



From coner



Texture

Texture என்ற கட்டளையை பயன்படுத்தி வர்ணக் கலப்பினைக் கொண்ட வடிவினை பெற்றுக் கொள்ளலாம்.



(படம் 9)

Texture என்பதை கிளிக் செய்தால் மெனு ஒன்று தெரியவரும் (படம் 9). இவ் மெனுவில் வர்ணக் கலப்புகளைக் கொண்ட பல வடிவங்கள் தெரியவரும். அதில் ஒரு வர்ணக்கலப்பு வடிவத்தை தெரிவு செய்யும்போது Sample என்ற இடத்தில் தெரிய வரும். பின்பு OK என்ற கட்டளையை கிளிக் செய்வதன் மூலம் வடிவங்களுக்கு வர்ணக் கலப்பினை வழங்கலாம்.



Pattern

Pattern என்ற கட்டளையை பயன்படுத்தி வர்ண வடிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். Pattern என்ற கட்டளையை கிளிக் செய்வதன் மூலம் ஒரு துணை மெனு தெரியவரும் (படம் 10). அதில் காணப்படும் Pattern ஒன்றினை தெரிவு செய்தல் வேண்டும்.



(படம் 10)

Pattern க்கு வர்ணத்தை வழங்க வேண்டுமாயின் Foregound என்ற இடத்தில் கிளிக் செய்து வர்ணத்தை வழங்குவதன் மூலம் Pattan ஐ வர்ணமாற்றத்திற்கு கொண்டு வர முடியும். Pattern க்கு பின்பக்க வர்ணம் வழங்க வேண்டுமாயின் Background என்ற இடத்தில் கிளிக் செய்து வர்ணத்தை வழங்குவதன் மூலம் Pattern க்கு பின் பக்கத்துக்கு Background colour ஐ வழங்கிக் கொள்ளலாம்.

தெரிவு செய்யப்பட்ட Pattern, ஆனது Sample என்ற இடத்தில் தெரிய வரும். பின்னர் OK என்ற கட்டளையை கிளிக் செய்வதன் மூலம் வரைபடங்களுக்கு Pattern களை வழங்கிக் கொள்ளலாம்.

உம் :-



Picture

Fill Effects இல் காணப்படும் Picture என்ற கட்டளையை பயன்படுத்தி வரைபட வடிவங்களுக்குள் படங்களை Insert செய்து கொள்ள முடியும். Picture என்ற கட்டளையை கிளிக் செய்யும் போது தோன்றும் துணை மெனுவில் (படம் II) Select picture என்ற கட்டளையை கிளிக் செய்யவும் அப்போது Select Picture என்ற மெனு தோன்றும். அம்மெனுவில் Look in என்ற இடத்தில் படங்கள் காணப்படும். Directory இல் உள்ள படத்தினை தெரிவு செய்து Insert என்ற கட்டளையை கிளிக் செய்து

படம் II

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதன் மூலம் வரைபடங்களுக்குள் படங்களை உட்புகுத்திக் கொள்ளலாம்.

உம் - வரையப்பட்ட வடிவத்தினை தெரிவு செய்து Fill Effects என்ற கட்டளையினுள் காணப்படும் Picture என்ற கட்டளையை கிளிக் செய்தால் அதில் உள்ள Select Picture என்ற துணை மெனு தோன்றும் அவ் மெனுவில் Look in என்ற இடத்தில படங்கள் காணப்படும். Directory இல் உள்ள படத்தினை தெரிவு செய்து Insert என்ற கட்டளையை கிளிக் செய்தல் வேண்டும். பின்னர் OK என்ற கட்டளையை கிளிக் செய்தால் அருகே உள்ள படத்தில் உள்ளவாறு வடிவம் பெறப்படும்.



Line color

Lineகளுக்கு வர்ணங்களை வழங்குவதற்கு இக்கட்டளை பயன்படுத்தப்படுகின்றது.

உம் - Auto shapes வடிவங்களின் விளிம்புகளுக்கு நிறங்களை எவ்வாறு வழங்கலாம் என்பதைப் பார்ப்போம். Auto shapes இல் உள்ள வடிவம் ஒன்றினை தெரிவு செய்து வரைந்த பின்னர் Drawing Tool bar இல் உள்ள Line color என்ற கட்டளையை கிளிக் செய்து நிறங்களை மாற்றம் செய்து கொள்ளலாம் (படம் 1).





(படம் 1)

No Line

No line என்ற கட்டளையை பயன்படுத்தி வரைபடங்களின் விளிம்புகளை (Line) இல்லாமல் செய்ய முடியும்.



உம் - வடிவம் ஒன்றினை வரைந்து கொள்ளவும் பின்னர் Fill color ஐப் பயன்படுத்தி வர்ணத்தினை நிரப்பிக் கொள்ளவும். வடிவத்தின் வெளி விளிம்பு தேவையில்லை எனின் வடிவத்தினை தெரிவு செய்து Line color இனை கிளிக் செய்து அதில் உள்ள No Line என்ற கட்டளையை கிளிக் செய்வதன் மூலம் Line ஐ இல் லாமல் செய்துகொள்ள முடியும்.



Patterned Line

Line color இல் காணப்படும் Patterned Lines என்ற கட்டளையை பயன்படுத்தி கோடுகளுக்கு Pattern களை வழங்கலாம்.



உம்:- Drawing Tool bar ல் காணப்படுகின்ற line color ஐ கிளிக் செய்து அதில் காணப்படும் Patterned Line என்பதை கிளிக் செய்தால் Patterned என்ற சிறிய மெனு தோன்றும். அதில் உள்ள Pattern ஒன்றினை தெரிவு செய்து OK என்ற கட்டளையை கிளிக் செய்வதன் மூலம் Line களுக்கு Pattern களை வழங்கலாம்.

Font color

Font color என்ற கட்டளையை பயன்படுத்தி எழுத்துக்கள், பந்திகள் ஆகியவற்றுக்கு வர்ணங்களை வழங்கிக் கொள்ளலாம்.

உம்:-

எழுத்துக்கள் அல்லது பந்திகளுக்கு வர்ணங்களை வழங்கவேண்டுமாயின் வர்ணங்கள் வழங்கப்பட வேண்டிய Text ஐ தெரிவு செய்த பின்னர் Font Color இனை கிளிக் செய்து அதில் காணப்படும் வர்ணங்களில் ஒன்றினை கிளிக் செய்வதன் மூலம் எழுத்துக்கள் அல்லது பந்திகளுக்கு வர்ணங்களை வழங்கிக் கொள்ளலாம்.

Line style

Line style என்ற கட்டளையை பயன்படுத்தி Line களுக்கு விரும்பிய கோட்டு வடிவங்களை (Line style) வழங்கலாம்.

உம்:-





Dash style

Dash style ஐ பயன்படுத்தி கோடுகளுக்கு அல்லது விளிம்புகளுக்கு பொட்டுப் பொட்டான கோட்டு வடிவினை (Dash style) வழங்கிக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரட்டை இளைஞர்கள்

-ஜேனா

"லொக் லொக்......"
"தம்பி வெளியாலயே போறாய்"
இருமியபடியே இயம்பினாள் ஈன்றவள்;
பதிலளிக்க நேரமின்றி
பரபரத்தான் மைந்தன்..........
மீண்டும் பெற்றவள் வினவமுன்
"ஓ மணை நீ பேசாம கிட பாப்பம்..."
அடங்கி விட்டாள் அன்னை!

கண்ணாடி அறைக்குள்
கண்சிமிட்டிக் கொண்டிருந்தன
கணினிகள்!
தனியே சென்று தலைக்கொன்றை மாட்டி
தட்டினான் சாவிப் பலகையை..........
"ஹாய் எப்படி சுகம்"
முகமறியா முகவரியறியா
முகமொன்றிற்கு
முதல் வினா இது.........

கடந்தன மணித்துளிகள்
களைக்க வில்லை இவன் விரல்கள்
கட்டணம் ஏறியது
பரவாயில்லை,
கட்டுவது அப்பன் தானே............
மூடும் நேரம் நெருங்க
முயன்றான் அரட்டை முடிக்க
"ஓகே.....
பாய்..........
சீ யூ
டேக் கெயர்.............."

ஓ,
அறியாத உறவில் தான்
எத்தனை அக்கறை........!

"லொக் லொக் லொக்......."
"ஏன் தம்பி லேட்டு"
தயங்கியபடி கேட்டாள் தாய்!
"ஏன், சொல்லத்தான் வேணுமோ?"
எரிச்சலுடன் வந்தது அவன் பதில்!
பத்துமாதம் உட்சுமந்து
பலமாதம் தோளில் சுமந்து
உலகின் முகம்காட்டி
முகவரி தந்தவளிற்கு
சுருங்கிப் போனது இதயம்!

இளைஞனே!
அறியாதவரில் கொள்ளும் அன்பில்
அரைவாசியேனும் உன் அன்னையில் வை!
அரட்டையில் களிக்கும் நேரத்தில் சிறிதை
அண்டியவரை கவனிக்க ஒதுக்கி வை!

இணையம் இடையூறானதல்ல..........
ஈடேற்றுவது.!

இது உங்கள் கவிதை வரிகளுக்கான பக்கம். கீழே பிரசுரிக்கப்பட்டுள்ள படத்தைப் பார்க்கையில் உங்கள் உணர்வுகள் சொல்லும் சேதியை வரி வடிவங்களாக்கி, எங்களுக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் வரிகள் தகவல் தொழில்நுட்பம் சார்ந்து இருக்கவேண்டியது மிக மிக அவசியம். கணினிப் பயன்பாட்டினால் மனங்கள் மரத்துப்போகின்றன என்றொரு கருத்து ஆய்வாளர்களிடையே உண்டு. இங்கு பிரசுரமாகும் வரிகள் மரத்துப் போன இதயங்களைக் கொஞ்சம் இளகச் செய்யட்டுமே!

டிஜிட்டல் கவிதை -04 இற்கான படம்.

அனுப்பவேண்டிய முகவரி:
டிஜிட்டல் கவிதை -04,
Computer Today,
No.4 C 6 - 1/1,
Fussels Lane,
Colombo- 06.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.மதுகாவலன்
புத்தளம்.

CheckBox Control ஆனது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தெரிவுகளை மேற்கொள்வதற்குப் பயன்படுகின்றது. Check Box இன் முக்கிய Property, Value property ஆகும்.

Option Button (Radio Button) Control ஆனது கூட்டமாகத் (Group) தொழிற்படும். ஒரு கூட்டமாக உள்ள Option Button களில் ஒன்றை மட்டுமே நீங்கள் தெரிவு செய்யக்கூடியதாக இருக்கும். Option Button இன் முக்கிய Property, Value Property ஆகும்.

ListBox Control ஆனது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தெரிவுகளை மேற்கொள்ளக் கூடிய List ஐக் கொண்டிருக்கும். ListBox இல் தெரிவுசெய்த ஒரு தெரிவானது Text எனும் Property மூலம் குறிப்பிடப்படும்.

ListBox இன் மற்றுமொரு முக்கிய Property, Sorted Property ஆகும். ListBox இல் தெரிவுகள் ஒரு List ஆகக் காணப்படுவதால் List I Scroll செய்வதன் மூலம் குறிப்பிட்ட ஒன்றைத் தெரிவு செய்துகொள்ளலாம்.

CombBox Control ஆனது ListBox Control ஐ ஒத்தது. ஆனால் ComboBox இல் எழுத்துக்களைத் திருத்துவதற்கான ஒரு Text Edit Field உம் காணப்படும். இதனால் ஒரு தெரிவை List இலிருந்து தெரிவு செய்யலாம் அல்லது Text Edit Field இல் Type செய்யலாம். ListBox Control போலவே ComboBox Controi இலும் தெரிவு செய்த அல்லது Type செய்த ஒரு தெரிவானது Text Property மூலம் குறிப்பிடப்படும்.

Horizontal ScrollBar ஆனது பல தெரிவுகளைக் கொண்ட அல்லது பல பெறுமானங்களைக் கொண்ட ஒரு List இல் ஒரு குறிப்பிட்ட தெரிவை அல்லது ஒரு குறிப்பிட்ட பெறுமானத்தைச் (Magnitude) சுட்டிக் காட்டுவதற்குப் பயன்படுகின்றது.

ScrollBar இன் ஆரம்ப பெறுமானத்திற்கும் (Minimum Value) இறுதி பெறுமானத்திற்கும் (Maximum Value) இடையே Scroll செய்வதன் மூலம் குறிப்பிட்ட பெறுமானம் சுட்டிக்காட்டப்படுகின்றது.

Vertical ScrollBar ஆனது Horizontal ScrollBar ஐ ஒத்தது. Horizontal ScrollBar கிடையாக இயங்கும். Vertical ScrollBar ஆனது நிலைக்குத்தாக இயங்கும். இவ்விரு ScrollBar களினதும் தொழிற்பாட்டிலோ அல்லது Property க்களிலோ எவ்வித மாற்றமும் இல்லை.

Timer Control ஆனது ஓர் குறிப்பிட்ட நேர இடைவெளியில் வேலைகளைச்

விஷுவல் பேஸிக்கை பயன்படுத்த ஆரம்பிக்கும் புதியவர்களுக்கும் தற்போது பயன்படுத்திவரும் பயனாளர்களுக்கும் உபயோகமான கட்டுரை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதற்காகப் பயன்படுகின்றது. Timer Control இன் முக்கிய Property, Timer Property ஆகும். இப் Property மூலமாகவே Timer Control இயங்குகின்ற நேரம் நிர்ணயிக்கப்படுகின்றது.

File System Control களானது Computer இல் உள்ள Drive க்கள், Folder கள், File கள் என்பவற்றைக் கையாள்வதற்குப் பயன்படுகின்றது. Drive ListBox, Directory ListBox, File ListBox என்பன File System Control இல் அடங்கும்.

Drive ListBox ஆனது Computer இல் உள்ள Drive க்களைக் கையாள்வதற்குப் பயன்படுகின்றது.

Directory ListBox ஆனது Drive ListBox இல் தெரிவுசெய்யப்பட்டுள்ள Drive இலுள்ள Folder களைக் கையாள்வதற்குப் பயன்படுகின்றது.

File ListBox ஆனது Drive ListBox இல் தெரிவுசெய்யப்பட்ட ஒரு Drive இலுள்ள அல்லது Directory ListBox இல் தெரிவுசெய்யப்பட்ட ஒரு Folder இலுள்ள File களைக் காட்டுவதற்குப் பயன்படுகின்றது.

Shape Control ஆனது Form இன் மீது வட்டம், சதுரம், செவ்வகம் போன்ற உருவங்களை வரைவதற்குப் பயன்படுகின்றது.

Line Control ஆனது Shape Control ஐப் போலவே Form இன் மீது கோடுகளை வரைவதற்குப் பயன்படுகின்றது.

Image Control ஆனது PictureBox Control ஐ ஒத்தது. எனினும் PictureBox Control உடன் ஒப்பிடும் போது Image Control இல் குறைந்தளவு Property க்களே காணப்படுகின்றது.

Data Control ஆனது Visual Basic மூலம் ஒரு Database ஐக் கையாள்வதற்குப் பயன்படுகின்றது. Data Control ஐப் பற்றி பின்னர் விரிவாக ஆராயப்படும்.

OLE (Object Linked Embedded) Control ஆனது Form இல் பிரதிசெய்யப்படும் ஒரு Window ஆகும். இதனூடாக Ms-Word, Ms-Excel போன்ற Application களால் உருவாக்கப்பட்ட File களைக் கையாளலாம். அது மட்டுமன்றி Photo க்கள், படங்களையும் இக் Control ஊடாக தொடர்புபடுத்தலாம்.

இதுவரை நாம் Tool Box இல் Default ஆகக் காணப்படும் 20 Control களையும் பற்றி சுருக்கமாக ஆராய்ந்தோம். இனி நாம் ஒவ்வொரு Control ஐப் பற்றியும் விரிவாக ஆராய்வதோடு, அவற்றைப் Programme களில் பயன்படுத்தும் விதத்தைப் பற்றியும் விரிவாக ஆராய்வோம்.

இக் Control களைப் பற்றி விரிவாக ஆராய முன்னர் நாம் Visual Basic இல் Programme ஒன்றை உருவாக்கும் விதத்தைப் பற்றி பார்ப்போம். இதன் மூலம் ஒவ்வொரு Control ஐயும் Programme இல் பயன்படுத்துவது இலகுவாக இருக்கும். பின்வரும் Programme இல் TextBox, Command Button, Label ஆகிய Control கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

Visual Basic இல் Programme ஒன்றை உருவாக்கும் முறை

Visual Basic இல் Programme ஒன்றை உருவாக்குவதில் 5 படிமுறைகள் உள்ளன. அவையாவன:-

1. Interface ஐ உருவாக்குதல் (Create The Interface)

2. Property களில் மாற்றஞ் செய்தல் (Set The Properties)

3. Programme இன் இயக்கத்திற்குரிய Coding ஐ எழுதுதல் (Write The Code)

4. Programme ஐ இயங்கச் செய்தல் (Running The Programme)

5. Programme ஐ Save செய்தல் (Save The Programme)

அடுத்த இதழில் தொடரும்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(world wide web)

WWW

வேர்ல்ட்வைட்வெப் கண்டுபிடித்த

– திமோதி ஜோன் பெனர்ஸ்-லீ! –

இன்று நம் அனைவருக்கும் உலகம் உங்கள் கையில் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியவர் என்ற பெருமை திமோதி ஜோன் பெனர்ஸ்-லீ யையே சேரும்.

கடந்த 1990ம் ஆண்டில் இவர், தனது உடன் இருந்த ரோபட் கயிலியோ என்பவரின் துணையுடன் வேல்ட் வைட் வெப் என்ற தகவல் சேகரிப்பு புரொஜெக்டை ஏற்படுத்தியதன் விளைவாகவே இணையதளம் என்ற உலகின் மிகவும் சக்தி வாய்ந்த ஊடகத்தை நம்மால் பயன்படுத்த முடிகிறது. திமோதியின் இந்த அரிய கண்டுபிடிப்புக்காக லண்டனைச் சேர்ந்த அவருக்கு, ராணி இரண்டாவது எலிசபெத் மிகப்பெரிய அந்தஸ்தை சுமார் 15 ஆண்டுகளுக்குப் பின் அளித்துள்ளார். லண்டனில் பிறந்த பெனர்ஸ்-லீ, ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தின் குயின்ஸ் கல்லூரியில் பயின்றார்.

பல்கலைக்கழகத்தின் கம்ப்யூட்டரை பயன்படுத்த லீக்குத் தடை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து நண்பர்களுடன் இணைந்து அவர், தொலைக்காட்சி பெட்டி மற்றும் புதிய கம்ப்யூட்டரை வடிவமைத்தார். இதற்காக சால்டரிங் கருவியைப் பயன்படுத்திய போதுதான் கண்டுபிடிப்புகள் பற்றி யோசிக்கத் துவங்கினார். வேல்ட் வைட் வெப் - ஐ லீ உருவாக்கும் முன்பாக புரோகிராமர் ஆகவும், சொப்ட்வேர் டைப் செட்டிங்கிலும், ஒபரேட்டிங் சிஸ்டம் துறையிலும் கடந்த 1980களில் அவர் பணி புரிந்துள்ளார்.

ஐரோப்பிய நிறுவனமான **CERN**ல பெனர்ஸ்-லீ பணியாற்றும் போது ஹைபர் டெக்ஸ்ட் அடிப்படையிலான புரொஜக்டின் போது வேல்ட் வைட் வெப்புக்கான ஐடியா கிடைத்தது. தகவல்களை ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் பங்கீடு செய்து, அப்டேட் செய்யும் வகையிலான புரோட்டோ டைப் சிஸ்டம் என்குயர் என்ற பெயரில் ஏற்படுத்தப்பட்டது. இந்த புரோகிராம் வெளியிடப்படாவிட்டாலும் வேல்ட் வைட் வெப்புக்கான ஆதாரமாக அமைந்தது.

அதன் பிறகு உலகின் முதல் இணையதளம் (வெப்சைட்) உருவாக்கப்பட்டு அடுத்த கட்டத்திற்கு சென்றது, வெப் சேவருக்கு **http** என அழைக்கப்பட்டு டிசம்பர் 1990ல் உருவாக்கப்பட்டது. ஆனால் இப்போது உள்ள வெப் கேமரா போன்ற நவீன வசதிகள் அப்போது அதில் இருந்திருக்கவில்லை. அதிலிருந்த வேல்ட் வைட் வெப் வெற்றிகரமாகச் செயல்படத் துவங்கியது.

முதல் பெனர்ஸ் லீ அட் இன்போ. செம். சிஎச் ஒகஸ்ட் 6ம் தேதி 1991ல் ஒன்லைனில் வந்தது. அதன் பின்னரே வெப் சேவர்கள் அதிகரிக்கத் துவங்கின. பெனர்ஸ் - லீ மற்ற வெப் சைட்களை நிரவகிக்கத் துவங்கிய போதிலும் அவரது வெப்சைட்டே உலகின் முதல் இணையதளமாக பட்டியலில் இடம்பெற்றிருந்தது. இந்த வெப்சைட் புரோகிராமை எந்தவித ரோயல்டியும் இல்லாமல் இலவசமாக அவர் வழங்கினார். இதே போன்ற முடிவை தற்போது பில்கேட்ஸ் எடுப்பாரா? என்ற கேள்வி எழுகிறது.



18ம் பக்கம் தொடர்ச்சி...

Date D

Date என்ற கட்டளையை இயக்குவதன் மூலம் பக்கங்களில் திகதி தெரியவரும்.

Time E

Time என்ற கட்டளையை இயக்குவதன்மூலம் பக்கங்களில் நேரத்தினை வழங்கலாம்.

File Path F

File Path என்ற கட்டளையை இயக்குவதன் மூலமாக பக்கங்களில் File இற்குரிய பாதையை வழங்கலாம்.

File Name G

File Name என்ற கட்டளையை இயக்குவதன் மூலம் பக்கங்களில் File Name இனை வழங்கலாம்.

Sheet Name H

Sheet Name என்ற கட்டளையை பயன்படுத்தி பக்கங்களில் Sheet பெயரினை வழங்கலாம்.

Picture I

Picture என்ற கட்டளையை இயக்குவதன் மூலம் Header இல் படங்களை வழங்கிக் கொள்ளலாம்.

Format Picture J

Format Picture என்ற கட்டளையை கிளிக் செய்வதன் மூலம் Header இல் உள்ள படங்களின் அமைப்புக்களை மாற்றலாம்.

இவ்வாறு Header and Footer இல் Custom Footer என்பதைத் தெரிவு செய்து மேலே கூறப்பட்டுள்ள கட்டளைகளின் பயன்பாட்டினை பக்கத்தின் கீழ் பகுதியில் Footer இல் வழங்கலாம். *தொடரும்.............*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Exercise

இது வரையில் நீங்கள் கற்றவற்றை வைத்துக் கொண்டு இம் முறை ஒரு சிறிய Animation காட்சி அமைப்பொன்றை உருவாக்குவோம்.

அதாவது நீரேரி ஒன்றில் பாய்மரப் படகு ஒன்று கரையை அடைவது போன்ற காட்சி அமைப்பு ஒன்றை நான் இங்கு விளக்கியுள்ளேன். நீங்கள் விளக்கங்களுக்கு ஏற்ப நீங்கள் விரும்பியவாறான ஒரு காட்சி அமைப்பை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

முதலில் ஒரு நீரேரியின் படத்தை Flash இல் Import செய்து கொள்ளவேண்டும் அதனை ஒரு 20 frame அளவிற்கு Insert key Frame கொடுத்து வைத்துக் கொள்ளவும்.



இரண்டாவதாக இன்னுமோர் Layer ஐ Insert செய்து கொள்ளவும் அதில் ஒரு பாய்மரப் படகு ஒன்றினை Import செய்து கொள்ளவும்.



பின்னர் Guide Line ஒன்றினை Insert செய்து அதில் உங்கள் படகு எங்கிருந்து எங்கு வரை செல்ல வேண்டும் என்ற வழியை பென்சில் Tool மூலம் குறித்துக் காட்டவும்.



அந்த Layer ஐயும் 20 Frame கள் வரை Insert key Frame கொடுக்கவும்.

பின்னர் படகினை select செய்து Insert menu வில் Convert to symbol என்பதை தெரிவு செய்யவும் அப்போது ஒரு மெனு தோன்றும் அதில் Move clip என்பதை தெரிவு செய்து OK கொடுக்கவும்.



படகினை 20 frame கள் வரை insert key Frame கொடுக்கவும். பின்னர் அந்த 20 Frame களிற்கும் இடது கிளிக் செய்து Create Motion Tween கொடுக்கவும்.



பின்னர் நீங்கள் முதலில் Guide Line இல் குறித்துக் காட்டிய வழியில் முதலாவது Frame இல் படகு ஆரம்பிக்க வேண்டிய இடத்திலும் (அதாவது நீங்கள் வரைந்த கோட்டின் ஆரம்பத்திலும்) கடைசி frame இல் (20 frame) படகு சென்று முடிய வேண்டிய இடத்திலும் படகு படத்தை நகர்த்தி வைத்துக் கொள்ளவும்.

இப்பொழுது Control menu வில் Test Move என்பதை கொடுத்து நீங்கள் செய்த Animation ஐ கண்டு கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூனியர் கம்ப்யூட்டர் ருடே

இணையம்

இணையம் தருமே நல்ல நல்ல
இணையில்லா வசதிகள் அள்ள அள்ள
தகவல் தேடலுக்கு தனித்தன்மை
பரிமாறிடவோ புதுப்புது வழிகள்
மின்னஞ்சல் அனுப்பவும். பெற்றிடவும்.
மிகைவேக இணைப்புக்கள் உள்ளனவே

குரல் வழி செய்திகள் பரிமாற
கூடுதல் வசதிகள் உள்ளனவே
ஒளிப்படக் காட்சிகள் இடம்பெற
ஒப்பில்லா இணையமும் ஒரு வழியாம்
லட்சம் லட்சம் - கோடிக்கோடி
இணையத்தளங்கள்
பக்கம் பக்கமாய்ப் பார்த்துப்
பயன் பெறலாம்.

மொத்தத்தில் இந்த இணையவசதி
இணையேயில்லா தனி வசதி

ஓவியத்தில் ஆர்வம் உள்ளவர்களுக்கு

க.தினேஸ்
ஆண்டு 5 வெலிமட
ம.ம.வி.



ஓவியத்தில் ஆர்வம் உள்ளவர்களுக்கு எனும் பகுதிக்காக குட்டித் தம்பி ஒருவரின் ஆக்கம் இது

ஒரு வன்தட்டின் சுயசரிதை.



வணக்கம் நண்பர் நண்பிகளே நான் ஒரு வன்தட்டு பேசுகிறேன் ஆங்கிலத்தில் என்னை கார்ட் டிஸ்க் (Hard Disk) என்றழைப்பார்கள். என்னை சீனாவிலுள்ள நிறுவனத்தில் உருவாக்கப்பட்டேன் நான் வன்மையான தகட்டினாலும் உயர் தொழில்நுட்பங்களுடனும் கூடிய ஒரு பொருளா, உருவாக்கப்பட்டேன்.

நான் பிறக்கும் போது மிகவும் நிறைகூடியதாயும் தகட்டினால் அழகாக கவசமிடப்பட்டிருந்தேன். என்னைப் போலவே பல நண்பர்கள் என்னுடன் சேர்த்து உருவாக்கப்பட்டார்கள் நாங்கள் பல கொள்ளளவுகளில் உருவாக்கப்பட்டோம். அதாவது 20GB, 30GB, 40GB, 60GB ஆகிய கொள்ளவுகளில் உருவாக்கப்பட்டோம் நான் 60GB யை உடைய பெரியவனாயிருந்தேன் எனக்கும் பெரியவர்கள் இருவர் உள்ளனர் அவர்கள் 80GB ஆகவும் 120 GB ஆகவும் உள்ளனர். 120 GB அண்மையில் வந்தவராவார்.

எங்களையேல்லாம் ஒவ்வொரு தொகுதிகளாக்கி பொதி செய்தார்கள். பின்னர் அவர்களனது களஞ்சிய அறையில் சேமிக்கப்பட்டோம். பின்னர் எங்களை கப்பல்களில் ஏற்றி இந்தியா இலங்கை மற்றும் பல நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்தார்கள். நானும் எனது நண்பர்கள் சிலரும் இலங்கைக்கு அனுப்பப்பட்டோம். அங்கோ ஒரு கார்ட்வெயார் கடை யொன்றில் எங்களை பக்குவமாக அடுக்கிவைத்தார்கள். அங்கே வந்த பெரியவர் ஒருவர் எனது கொள்ளளவைக் கருத்திற் கொண்ட என்னை வாங்கிச் சென்று தனது கணினியில் இணைத்துக் கொண்டார். பின்னர் என்னை தனது தேவைக்கேற்றவாறு C, D, E, F என பல பாகங்களாக பிரித்து ஒழுங்குபடுத்திக் கொண்டார். C என்னும் பகுதிக்குள்ளே என்னை இயக்குவதற்கான மென்பொருள் ஒன்றினை உள்ளீடு செய்து தனக்குத் தேவையான மற்றும் சில மென் பொருட்களையும் உள்ளீடு செய்தார். பல புதிய புதிய விடயங்களைப் பார்ப்பது எனக்கு உற்சாகமாயிருந்தது. பின்னர் அவர் தனது முக்கிய கோப்புக்கள் மற்றும் விடயங்களை என்னுள்ளே சேமித்து வைத்துக் கொண்டார். சில விடயங்களை இரகசியமாக பதுக்கியும் வைத்துக் கொண்டார். சில தேவையில்லாத விடயங்கள் எனின் அவற்றை என்னிலிருந்து அழித்து விடுவார்.

அவர் என்மீது அதிக கவனம் செலுத்துவார். ஏன் எனில் சில வேளைகளில் எனக்கு ஒவ்வாத நிகழ்ச்சிகள் இடம் பெற்றால் என்மீது பாதிப்புகள் ஏற்படும் என்று அவர் எண்ணுவார். அதனால் என்னை மிகவும் கவனமாகக் கையாளுவார். முன்னெச்சரிக்கையாக மின்சாரம் கூடுதலாகவோ குறைவாகவோ வருமாயின் அதனால் நான் அழிந்து போகக் கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதால். என்னை CPU போட்டு பாதுகாத்து வருகிறார் பல ஆண்டுகள் என் ஆயுள் நீடிக்கும் என்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன் எல்லாம் என் எஜமானின் கையிலேயே உள்ளது அவர் என்னை எவ்வாறு பயன்படுத்துகிறார் என்பதைப் பொறுத்தோ என் ஆயுள் உள்ளது அது வரையில் நான் மிகவும் சந்தோசமாயிருப்பேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்குபடுத்துங்கள்

A)	சூப்பர் கம்ப்யூட்டர்	1976	வானடேஸல்	அமெரிக்கா
B)	டிரான்சிஸ்டர்	1948	பார்பீன் ஷாக்லீ பிராட்டைன்	அமெரிக்கா
C)	தட்டச்சுப் பொறி	1808	பெல்லிகிரின் டாரி	இத்தாலி
D)	எக்ஸ் கதிர்	1895	வில் ஹெல்ம் கே.ராண்ட் ஜவன்	அமெரிக்கா
E)	ஒளிப்பதிவு முறை	1948	Dr.பிட்டர் கோல்ட் மார்ட்	அமெரிக்கா
F)	செல்போன்	1908	Dr.ஜே.பிராண்டன் பெர்கர்	சுவிட்சர்லாந்து
G)	மின் மாற்றி	1831	மைக்கல் ஃபாரடே	பிரிட்டன்
H)	தொலைநோக்கி	1808	ஹான்ஸ் லிப்பர்ஸ்கை	நெதர்லாந்து
I)	லேசர்	1960	டாக்டர் சார்லஸ் எச் டவுண்ஸ்	அமெரிக்கா

கைலாய மலையில ஒரு கொம்பியூட்டர் வாங்கிச் சினமாம். ஆனா அதில சில வேலைகளை லேசாச் செய்யவே முடியேல்லையாம்......

ஏன்?

ஏனெண்டா, மௌஸை பிள்ளையார் எடுத்துக் கொண்டு உலகம் சுற்றிப் பார்க்கப் போயிட்டாராம்.



ம.விமலா
கம்பளை த/ம.வி

சென்ற முறைக்கான விடைகள்

A)	எண் கணித கூட்டல் இயந்திரம்.	1642	பஸ்கல்	பிரான்ஸ்
B)	தொலைபேசி	1876	பெல்	அமெரிக்கா
C)	தட்டச்சு இயந்திரம்	1868	ஹோல்ஸ்	அமெரிக்கா
D)	மின்கலம்	1800	வோல்ட்டா	இத்தாலி
E)	கணினி	1823	பபேஜ்	பிரிட்டன்
F)	இசைத் தட்டு	1887	பெரிலினர்	அமெரிக்கா
G)	வானொலி	1895	மார்க்கோனி	இத்தாலி
H)	மின் விளக்கு	1879	எடிசன்	அமெரிக்கா

கண்கள் கவனம்.!

தொடர்ந்து கம்ப்யூட்டரைப் பாவிப்பதால் கண்கள் பாதிப்படையும் வாய்ப்புகள் உண்டு. இதற்கு கணினித் திரையில் இருந்து வெளிவரும் பிரகாசமான ஒளிக் கதிர்கள் காரணமாக இருக்கின்றன. கண்களிலுள்ள ஈரத்தன்மையும் குறைந்துவிடும். எனவே ஒரு மணித்தியாலம் தொடர்ச்சியாகக் கணினியைப் பாவித்திருந்தால் குறைந்தது 10 நிமிடங்களாவது கண்களை மூடி கண்களுக்கு ஓய்வு கொடுக்க வேண்டும்.

கண்களுக்குப் பாதுகாப்பாக மருத்துவர் ஆலோசனையுடன் ஒளிக்கதிர் வடிகட்டிக் கண்ணாடிகளை அணிவதும் கண்களுக்குப் பாதுகாப்பைத் தரும்.

கணினியை கவனமாகக் கையாளுங்கள்.

உங்கள் கணினியை சுத்தமான இடத்தில் வைத்துக் கொள்ளுங்கள் தூசுத் துகள்கள் தான் கணினிப் பாகங்களின் முக்கிய எதிரி. எனவே கவனமாகப் பேணவேண்டும்.

கணினி பாவித்துக் கொண்டிருக்கும் போது அடிக்கடி மின்சாரம் துண்டிக்கப்பட்டு வந்தால் அது கணினியைப் பாதிக்கும். எனவே மின்கட்டுப்பாட்டு அமைப்பு (உதாரணமாக யுபிஎஸ்) ஒன்றைப் பயன்படுத்துங்கள்.

சிடி, ப்ளொப்பி போன்றவற்றைப் பயன்படுத்தும் போது வைரஸ் ஸ்கான் செய்தபின் அவற்றிலிருந்து தகவல் பரிமாற்றம் செய்யுங்கள்.

இவ்வாறான பாதுகாப்பு முறைகளைக் கையாண்டு கணினியின் ஆயுளை அதிகரித்துக் கொள்ளுங்கள்.

ந.ஜீவராஜ்
குருநாகல் த/வி



ஆங்கில அறிவுக்கு கைகொடுக்கும் எம். எஸ். வேர்ட்

எம். எஸ். வேர்ட் எனும் மென்பொருளில் நாம் கடிதங்கள், கோப்புக்கள் போன்றவற்றை இலகுவாகத் தயாரித்துக் கொள்ளலாம்.

இந்த மென் பொருளில் ஆங்கில எழுத்து, வார்த்தைகள், இலக்கணம் போன்றவற்றைச் சரி பார்த்து திருத்திக் கொள்ளலாம். எழுத்துக்களை விசைப்பலகை மூலம் தட்டச்சு செய்யும் போதே வார்த்தைகள், இலக்கணம் போன்றவற்றில் இருக்கும் தவறுகளை. எம்.எஸ். வேர்ட்டில் இருக்கும் துணையிகள் அவற்றின் கீழாக வெவ்வேறு வர்ணக் கோடுகளிட்டு தெரிவித்துவிடும்.

தவறுகளைத் திருத்தி, சரியான முறையில் வாக்கியங்களை அமைத்துக் கொள்ளவும் இந்த மென் பொருளில் வசதி இருப்பதால் மிக உதவியாக இருக்கிறது.

பாடசாலை மாணவர்கள் பிழையின்றி ஆங்கிலத்தில் கடிதங்கள் கோப்புக்களைத் தயாரிக்க எம்.எஸ்.வேர்ட் மிகச் சிறந்த மென்பொருளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பில்கேட்சின் வாழ்க்கை வரலாறு

Life histry of William Bill H Gates

இன்று மிகப் பெரிய கம்ப்யூட்டர் softwaer நிறுவனமாக பல்லாயிரக் கணக்கான தொழில்நுட்ப வல்லுனர்களுடன் பலகோடி வருமானம் ஈட்டுகின்ற நிறுவனமாக உள்ள Microsoft ஆரம்ப காலத்தில் எவ்வாறு இருந்தது, எவ்வாறு வளர்ந்தது, microsoft வளர்ச்சியின் பின்னனியில் யார் யாரெல்லாம் உள்ளனர், என்பதை விரிவாகப் பார்ப்போம்.

William Bill H Gates வில்லியம் பில் கேட்ஸ் என்பவர் microsoft நிறவனத்தின் உரிமையாளர். கம்ப்யூட்டரின் softwear துயைில் சாதனை படைத்தவர். உலகில் softwaer உற்பத்தியில் அனைவரும் பயன்படுத்தும் விதத்தில் அவர்களின் பயனைப் பரப்பி பயன்படுத்த வைத்து அதன் மூலம் பெரும் பணக்காரராகி உலகில் விரல்விட்டு எண்ணக் கூடிய செல்வந்தர்களில் ஒருவராகி உள்ளர்.

இவரது வெற்றியின் பின்னணியில் இவருடைய உழைப்பு கம்ப்யூட்டர் மீது இவர் கொண்டிருந்த காதல் எதையும் புதிய நோக்குடன் பார்க்கும் திறன் எளிமையாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தின் தாக்குதலால் கம்ப்யூட்டர் மொழிகளைக் கண்டு பிடித்த ஆற்றல் இப்படிப்பட்ட பல விடையங்கள் உள்ளன இவர் தொடர்ந்து செய்த முயற்சியும் கடின உழைப்பும் இவரை வெற்றியின் உச்சிக்கு கொண்டு வந்தது.



பில் கேட்சின் குடும்பமும் பிறப்பும்.

வில்லியம் பில்கேட்ஸ் அனைவராலும் பில் கேட்ஸ் என்றே அழைக்கப்பட்டார். இவர் 1955 ஆம் ஆண்டு அக்டோபர் 28ம் திகதி பிறந்தார் இவருக்கு இரண்டு சகோதரிகள் உள்ளனர் இவரது தந்தை வழக்கறிஞராகப பணியாற்றி வந்தார் இவரது தாய் திருமதி.மேரி பள்ளி ஆசிரியையாகப் பணியாற்றினார்.

பில் கேட்சின் மாணவப்பருவம்.

தனது மூன்றாம் வயதில் பள்ளிப் பருவத்தில் கம்ப்யூட்டர் மீதும் அதில் பயன்படுத்துகின்ற softwaer மற்றும் Language மீதும் தனக்கிருந்த ஆர்வத்தை தானே கண்டு கொண்டார். 1968 ஆம் ஆண்டு படித்து வந்த பாடசாலையில் மாணவர்களை கம்ப்யூட்டர் பயிற்சியில் ஈடுபடுத்துவதில் மும்முரமாக ஈடுபட்டார்.

அவருடைய உயிர்த் தோழர்கள் சேர்ந்து புரோக்கிராம்களின் குழு ஒன்றை ஆரம்பித்தார். தங்களுக்கு தெரிந்த நண்பர்களை சேர்த்துக் கொண்டார். அந்த கால கட்டத்தில் நடைமுறை வாழ்க்கைக்குத் தேவையான படி புரோக்கிராம்கள் எழுதுவது எப்படி என்றும் தெரிந்து கொண்டனர். நாளடைவில் நிறைய மாணவர்களைச் சேர்த்துக் கொண்டனர். கூட்டு முயற்சியில் கம்ப்யூட்டர் சம்பந்தப்பட்ட பல தகவல்களை சேகரித்தனர்.

Microsoft இன் அடித்தளம்

அந்த ஆர்வமும் உழைப்பும் தான் இன்றைய Microsoft இன் அடித்தளமாக விளங்குகின்றது. பில்கேட்ஸின் புரோக்கிராமர்களின் குழு கம்ப்யூட்டரைப் பயன்படுத்த மாற்று வழியைத் தேடியது. ஆலெனின் தந்தை வேலை செய்து வந்த வோஷிங்டன் பல்கலைக்கழகத்தில் உள்ள கம்ப்யூட்டர்களைப் பயன்படுத்திக் கொண்டனர் Information science என்ற நிறவனம் Pay roll புரோகிராமை எழுத

தொடர்ச்சி 26ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Page Steup

கணினியில் ஒவ்வொரு File ஐ Open செய்து வேலையை செய்கின்ற போது ஒவ்வொரு பக்கங்களும் எந்த அளவுகளில் அமையவேண்டும் அதற்குரிய செயல் முறைகளை மேற்கொள்வதற்கு இவ் Page setup என்ற கட்டளை உதவுகின்றது. இது மிகவும் முக்கியமான ஒரு பகுதியாக விழங்குகின்றது.

உம் - நாம் ஒரு தரவுகளை Type செய்து பிரின்ட் எடுக்க வேண்டுமாயின் அந்த தரவு எந்த அளவைக் கொண்ட Pepear இல் பிரின்ட் எடுக்க வேண்டும் அதற்குரிய அளவுத்தாளை நிலைக்குத்தாக பிரின்ட் எடுக்க வேண்டுமா அல்லது கிடைப்பக்கமாக பிரின்ட் எடுக்க வேண்டுமா என்பதை Page setup செய்த பின்னரே பிரின்ட் எடுக்க வேண்டும்.

File என்ற மெனுவில் காணப்படும் Page setu என்ற கட்டளையைக் கிளிக் செய்தால் Page setup என்ற சிறிய துணை மெனு தெரிய வரும். அதில் Page, Margins, Header / Footer, sheet ஆகிய கட்டளைகள் காண்ப்படும் அதில் Page என்ற கட்டளையைத் தெரிவு செய்தால் ஒரு துணை மெனு தெரிய வரும் (படம் 1)



(படம் 1)

Orientation

Orientation என்பதை கீழ் இரு கட்டளைகள் காணப்படுகின்றன. Portrait, Landscape இதில் Portrait என்பதை தெரிவு செய்தால் நாம் வேலை செய்ய வேண்டிய பக்கத்தை நிலைக்குத்து பக்கமாக பயன்படுத்திக் கொள்ளலாம். அல்லது கிடைப்பக்கமாக மாற்ற வேண்டுமாயின் Landscape என்பதைத் தெரிவு செய்தல் வேண்டும்.

Scaling

என்ற கட்டளையின் கீழ் உள்ள Adjust to என்பதை கிளிக் செய்வதன் மூலம் தரவுகள் A4 இல் உள்ளடக்கப்படாமல் பக்கங்கள் கூடுதலாக இருக்குமாயின் அதனை 50%, 75% என மாற்றம் செய்து A4 தாளில் பிரதி (Print) எடுத்துக் கொள்ளலாம். நாம் % கூட்டும் போது 200% 300% தரவுகளை பெரிய அளவிலும் பிரதி எடுத்துக் (Print) கொள்ளலாம்.

Filto என்ற கட்டளையை செயற்படுத்துவதன் மூலம் seet இல் ஒரு பக்கத்துக்கு வெளியில் Type செய்யப்பபட்ட தரவுகள் காணப்பட்டால் அவற்றினை சுருக்கி ஒரு பக்கத்திற்குள் Print எடுக்க முடியும்.

Paper Size

வேலை செய்வதற்கு முன்பு பக்கத்தினை (Paper) அளவினைத் தெரிவு செய்யலாம். டவுன் அரோவை கிளின் செய்வதன் மூலம் Papoer அளவுகள் காணப்படும். அவற்றில் ஒன்றினை தெரிவு செய்தல் வேண்டும். Standard size இல் உள்ள paper அளவினை தெரிவு செய்தால் அதனுடைய நீள அகலம் தெரியவரும்

நாம் விரும்பிய அளவில் pepar அளவை மாற்ற வேண்டுமாயின் custem என்பதை தெரிவு செய்தல் வேண்டும்.

Quality

இவ் கட்டளையை பயன்படுத்தி Print எடுக்க இருக்கும் தரவுகள் படங்கள் அவற்றில் தரவுக் கேற்ப Print quality ஐ மாற்றி அமைத்துக் கொள்ளலாம்.

140 x 144 dpi
120 x 144 dpi

First Paper number

இவ் கட்டளையை பயன்படுத்தி தரவுகளுக்கு Page இலக்கத்தினை இட்டுக் கொள்ளலாம். ஒழுங்காக பேஜ் இலக்கத்தை பெற்றுக் கொள்வதற்கு Auto என்ற கட்டளையை தெரிவு செய்தல் வேண்டும். (12 3)

Margine

Margin என்றால் Type செய்ய இருக்கின்ற தாளின் விழிம்புக்கும் Type செய்யப்பபட்ட Text இன் எல்லைப் பகுதிக்கும் இடையே உள்ள தூரத்தை வரையறுப்பதற்கு margin என்ற கட்டளையைப் பயன்படுத்துகின்றது.

File மெனுவில் காணப்படும் Page Setup என்ற கட்டளையை கிளிக் செய்தால் Page stup என்ற மெனு தோன்றும் அதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Margines என்ற கட்டளையை கிளிக் செய்தால் Margine தோன்றும். (படம் 2)



(படம் 2)

Margine என்ற துணை மெனுவில் காணப்படும் Top என்பது Page இன் மேல் பக்க Margeins அளவைக் குறிக்கும். இவற்றினை ஜெொப் டவுன் அரோவை பயன்படுத்தி கூட்டிக்குறைத்துக் கொள்ளலாம் Left Right Bottam ஆகியவற்றின் அளவுகளையும் மாற்றம் செய்து கொள்ள முடியும்.

Center on Page என்றதன் கீழ் Horizontally Vertically ஆகிய இரு கட்டளைகள் காணப்படுகின்றன. இதில் Horizontally என்ற கட்டளையை கிளிக் செய்தால் Page இல் Type செய்யப்பட் தரவுகள் Page தாளிற்கு நிலைக்குத்தாகவும் பக்கத்துக்கு மத்தியிலும் காணப்படும்.





vertically என்ற கட்டளையை தெரிவு செய்தால் தாளிற்கு கிடையாகவும் பக்கத்திற்கு மத்தியிலும் காணப்படும் Vertically Horizontally ஆகிய இரு கட்டளையும் தெரிவு செய்யப்பட்டால் Page இல் காணப்படும். தரவுகள் பக்கத்துக்கு நிலைக்குத்தாகவும். கிடையாகவும் மத்தியில் காணப்படும்.

Header and Footer

புத்தகங்களை வடிவமைக்கும் போது ஒரே மாதிரியான Text களை தலைப்புக்களையும் சில விபரங்களையும் அடிப்பக்கமாகவும் கொண்டு ஒவ்வொரு பக்கத்திலும் மாற்றம் அடையாமல் இருப்பதற்கு Header and Footer பயன்படுத்தப்படுகின்றது.

View menu வில் உள்ள Page Setaup என்பதை கிளிக் செய்தால் Page Setup என்ற மெனு தெரிய வரும் அதில் உள்ள Header and footer என்ற துணைக் கட்டளையை தெரிவு செய்தல் வேண்டும் அப்போது ஒரு மெனு தெரிய வரும்



(படம் 3)

அதில் Custom Header என்பதை தெரிவு செய்தால் Header என்ற பெயருடன் கூடிய மெனு தெரியவரும். (படம் 4) அவற்றில் உள்ள கட்டளைகளை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.



(படம் 4)

Font 1 A

Font என்ற கட்டளையைக் கிளிக் செய்வதன் மூலும் ஒரு துணை மெனு தெரியவரும் இத்துணை மெனுவில் Font, Bold, Italic, Size, Underline ஆகியவற்றை Text க்கு வழங்கலாம் மற்றும் Effects என்பதன் கீழ் உள்ள கட்டளை பயன்படுத்தி எழுத்துக்களுக்கு Strikethrough, Superscript, Subscript, ஆகியவற்றினை வழங்கலாம்.

Page Number B

Page Number என்ற கட்டளையை பயன்படுத்தி பக்கத்தின் எந்த இடத்தில் இடது, மத்தி, வலது பக்கத்துக்கு இலக்கம் வரவேண்டுமோ அங்கே Cursor ஐ நிறுத்தி # கட்டளையை கிளிக் செய்தால் பக்கம் எல்லாவற்றிற்கும் Page number தானாக இடப்படும்.

Number of Pages C

Number of Page என்ற கட்டளையை இயக்குவதன் மூலம் பக்கங்களின் கூட்டுத் தொகை தெரியவரும்.

தொடர்ச்சி.....12ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

nilavu.com
இதயம் குளிரும் இணையம்
www.nilavu.com

DIGITAL HOME
Digital Productions

Web Camera வில் இருந்து **Special Effect** களுடன் **VCD** ஆக மாற்றித் தரப்படும்.

உங்கள் புகைப்பட அல்பங்களை Digital முறையில் காலத்தால் அழியாத வகையில் மாற்றலாம்.

DVD 150/= முதல்

DVD, VCD, MP3, ACD Also Available

தமிழ் மென் பொருட்கள்- தமிழா, மின் அகராதி, மற்றும் Learning CDs - Flash, Word, Excel, SQL, Java, C++, PC Assembling.

கம்ப்யூட்டர் ஜோதிடம்

ஜாதகக் கணிப்புகள் பிறப்புப் பலன்கள்
திருமணப் பொருத்தம்
வருட பலாபலன்கள்
முழுமையான கணிப்புக்கள்
திருத்தமான தரவுகள்.

Our Services

Web Desingning
Web Hosting

Advertising (web)
Advertisement Designing

Desktop Publishing
Printing
Image Editing
Book Publishing

Digital e-book Designing

Video Editing
Video Capturing
Sound works

Multimedia Designing
3D Modeling Designing
Animations

Learning CDs
Digital Printing

Computer Based Horoscope

Software Development
Computer Sales & Repair

Job Bank

DREAM SOLUTIONS (PVT) LTD.

4c6 1/1 Fussels Lane,
Wellawatta,
Colombo - 06

T.P:- 0112 362112

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையத்தில் இறக்கியவை

ஷொட்!

ஸி.கனிஸ்ரன்,
கனடா.



எம்.றோய்,
சுவிஸ்.

கைவண்ணம்.. கை வண்ணம்.. என்று சொல்வாங்களே... அது இது தானுங்கோ...!

www.yarlonline.com
யாழ் மாவட்ட விபரங்களைத் தொகுத்துத் தரும் தளம் இது. தேடல் வசதி, மின்னஞ்சல், தனிப்பட்ட இணைப்புப் பக்கங்களை உருவாக்கும் வசதிகளும் இதன் சிறப்பம்சங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சந்திர சர்ச்சை !

மறுபடியும் சர்ச்சைக்குரியதாகியிருக்கும் புகைப்படம் இது.
சந்திரனில் முதன் முதலில் மனிதன் தரையிறங்கியபோது எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் இப்புகைப்படத்தில் - காற்றில்லாத வெளியில் அமெரிக்கக் கொடி பறப்பதையும் - நிழல் விழுவதையும் - சுட்டிக்காட்டி அடிக்கடி சர்ச்சை கிளப்பப்படுவது வழமை.
இப்போது மறுபடியும் மின்னஞ்சலில் இப்புகைப்படத்தை அனுப்பி - நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? என்று உசுப்பிவிட்டிருக்கிறார்கள்.
விவாதங்கள் சூடாக நடைபெற்றுவருகின்றன.



நண்பர் மகிழ்ராஜா நெற்றில் தேடிப்பிடித்து கொடுத்த சில ஓவியங்களில் இரண்டுதான் இவை.

அண்மையில் இடம் பெற்ற ஆசியக்கிண்ணப் போட்டிகளின் இறுதிப் போட்டிக்குத் தெரிவான இந்திய இலங்கை அணிகளுக்கிடையிலான போட்டியின் இறுதியில் ஆசியக் கிண்ணத்தைக் கைப்பற்றிய இலங்கை அணியினர் குதூகலத் துடன் காணப்படுகின்றனர்.

மின்னஞ்சலில் அனுப்பிவைத்தவர் : பி.சரவணன், நீர்கொழும்பு.

ஜமாய்ச்ச கதை......!

இணையத்தில் இறக்கியவை பகுதியில் உங்கள் தொகுப்புக்களும் இடம் பெறலாம். இணையத்தில் உங்களுக்குச் சிக்கிய விடயங்களில், மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளலாம் என்று நீங்கள் எண்ணும் தொகுப்புக்களை எமக்கு அனுப்பி வையுங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GIT பொதுத்தகவல் தொழில்நுட்பக் கிருத்தியம்

General information technology

தயாரிப்பு: தகவல் தொழில்நுட்ப அணியின் பாடசாலைக் கல்வித் திட்டப்பிரிவு

பொதுத்தகவல் தொழில்நுட்பக் கிருத்தியம் (Curriculum)

ஆங்கில மொழிமூலம் ஆண்டு 12க்கு அறிமுகப்படுத்தப்பட்டதை அடுத்து, ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இப் புதிய பாடநெறியில் வழிகாட்டல் தேவைப்பட்டது.

இலங்கை முழுவதும் பரந்துள்ள பாடசாலைகளில் ஆசிரியர்கள், மாணவர்கள் இதை விளங்கிக்கொள்வதில் எதிர்நோக்கக்கூடிய சிக்கல்களைத் தவிர்த்தற்பொருட்டு தேவையான பாட உள்ளடக்கத்தைக் கொண்டதாக இத்தொடர் வெளிவரு கிறது.

ஆசிரியர்களும், மாணவர்களும் இதனைத் தமது கற்பித்தலுக்கும், கற்றலுக்கும் பிரயோகிக்கலாம்.

CD - R

CD பதிவு செய்யக்கூடிய (CD - R) Drive ஆனது வாசித்தல் / எழுதல் தகமை உடையது. இதனைப் பயன்படுத்தி 15 நிமிடத்தில் 650 MB வரையான தகவலை நீங்கள் இதில் எழுதலாம். CD - R ஆனது Hard drive ஐ back up செய்தலுக்கும் பயன்படும்.

சாதாரணமான CD-R disk ஒரு தடவை மட்டுமே எழுதப்படலாம். ஆனால் CD-RW எனப்படும் ஒரு வகை disk பொருத்தமான drive ஐ பயன்படுத்தி எழுதப்பட்டு, அழிக்கப்பட்டு மீண்டும் எழுதப்படலாம். இவை CD - R disk ஐ விட விலையுயர்ந்தவை.



Magneto - optical Disks காந்த - ஒளியியல் disk

காந்த ஒளியியல் கருவிகள் laser கதிரினதும் காந்த எழுது தலையினதும் உதவியுடன் disk இற்கு தகவல் எழுதக் கூடியவை தகவலை disk இற்கு எழுதுவதற்காக laser ஆனது disk இன் மேற்பரப்பில் ஒரு புள்ளியில் ஒருமைப்படுத்தப்படும். (குவிக்கப்படும்) இதனால் அவ்விடம் சிறிதளது வெப்பமாக்கப்படும் இது காந்த எழுது தலையை disk இனது மேற்பரப்பிலுள்ள.

காந்தப் பதார்த்தத்திலான சிறிய துகள்களின் (உண்மையான சிறிய பளிங்குகள்) பௌதீக அமைப்

பொழுங்கை மாற்ற இடமளிக்கும் இந்த சிறிய பளிங்குகள் தமது அமைப் பொழுங்கிற்கமைய ஒளியை வெவ்வேறாக தெறிப்படையச் செய்யும். பளிங்குகளை ஒரே திசையில் ஒழுங்கு படுத்துவதற் மூலம் "0" என்பதை சேமிக்கலாம் பளிங்குகளை எதிர்த்தசையில் ஒழுங்கு படுத்துவதால் "1" என்பதை சேமிக்கலாம்.

மற்றொரு தனியான தாழ்வலு laser ஆனது நியம CD-ROM ஐ ஒத்த வகையில் disk இலிருந்து தகவலை வாசிக்கப் பயன்படும் CD-RoM உடன் ஒப்பிடுகையில் Magneto optical disk இலுள்ள அனுகூலம் யாதெனில் இவை வாசிக்கவும் எழுதவும் உதவும் இருப்பினும் CD ROM களை விட இவை கணிசமான அளவு விலை உயர்ந்தவை.

Digital Versatile Disc (DVDS)

(Digital பல்வேறு பயன்பாடுள்ள Disk கள்) DVD ஆனது CD -ROM ஐ ஒத்தது இவை ஒரே மாதிரியாக தென்படுவதுடன் அதிகளவு தகவல் சேமிக்கவும் பயன்படும் CD - RomI போல

இவையும் கணினிப் பிரயோக மென்பொருள். பல்லூடக நிகழ்சிகள் (multimedia Programs (encyclopedias) மற்றும் முழு நீளத்திரைப்படம் என்பவற்றை சேமிக்கப் பயன்படும்.

பதிவு செய்தலுக்கு (install) 6-7 CD ROM கள் தேவைப்படக் கூடிய எந்தவொரு பிரயோக மென்பொருளையும் ஒரு தனி DVD இல் சேமிக்கலாம். ஏனெனில் CDRoM வகைக்குரியது 650 MB தகவலை சேமிக்கும் ஆனால் DVD (4.7 GB) வரை தகவலை சேமிக்கும அண்மைக்கால DVD

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் தகவல் disk இற்கு எழுதப்படுவதற்கும் வகை செய்வதால் இவை பொதுவான hard disk போல பயன்படலாம். DVD drive (DVD ஐ வாசிக்க தேவையான வன்பொருள்) ஆனது CD Rom Drive ஐ போன்றது.

Back up Device

நிகழ்வுகளுக்கும் (Programs) தகவல்களுக்கும் ஒழுங்கான Back ups எடுத்தல் பாதுகாப்பு காரணங்களுக்கு முக்கியமானதாகும். Floppy disk அதியுயர் சேமிப்பு கொண்டிருக்காததால் மிக அரிதாகவே இத்தேவைக்கு பயன்படுகின்றது. இதற்கு பதிலாக அதிக கொள்ளளவும் விரைவான சேமிப்புமுடைய கருவிகள் பயன்படுகின்றன. பிரதானமானவை பின்வருமாறு.

Tape Streamers

Tape steamers ஆனது hard drive இலுள்ள தகவலை back -up எடுப்பதற்கு பயன்படுகின்றது.



ZIP drives



hard drive ஐ back -up செய்ய இது உபயோகமானது இவை அதிக சேமிப்பு கொள்ளவுடைய Floppy disk ஐ பயன்படுத்துகின்றன இவை சிறிதளவு பெரிதாகவும். சாதாரண Floppy களை விட இரு மடங்கு தடிப்பானதாகவும். இருக்கும் இவை பொதுவாக 100MB ஐ சேமிக்கக் கூடியவை 1.44 MB சாதாரண Floppy களுடன் ஒப்பிடுகையில் drive மற்றும் சுழற்றக் கூடிய disk இரண்டும் விலை கூடியவை இவை ghard disk இலுள்ள தகவலை buck -up செய்யவும் மற்றும் பாரிய கோப்புகளை கணினிகளுக்கிடையில் இடமாற்றவும். உதவும்.

இடப் பற்றாக்குறை காரணமாக சில தொடர்கள் இவ்விதழில் இடம்பெறவில்லை. வரும் இதழ்களில் அவற்றைச் சேர்த்துக்கொள்வோம்.

JAZ drives



JAZ drive ஆனது ஒரு கழற்றக் கூடிய Disk drive இது தகவலை இடமாற்றுவதில் மிக விரைவானது. ஒவ்வொரு disk உம் 2GB (2000MB) வரையான தகவலை வைத்திருக்கக் கூடிய இது உயர்ந்த தகவல இடமாற்ற வேகத்தை கொண்டிருப்பதால் மிகக் குறைந்த நேரத்தில் back -up செய்வதற்கு உதவும் சாதாரண disk drive களைப் போல JAZ disk உம் நாள்வாரியான சேமிப்புக்கும் பயன்படலாம்.

கணினிகளின் வகைப்படுத்தல் / பாகுபாடு

வர்த்தக கணினிகளின் வகைகள்

கணினிகள் 2 பிரிவுக்குள் வகைகப்படுத்தப்பலாம்.

a) பயன்படும் தர்க்கவியல் (Logic) க்கு அமைவாக பாகுபடுத்தல்

b) பருமனுகக் அமைவாக பாகுபடுத்தல்.

a) பயன்படுத்தப்படும் தர்க்கவியல் (Logic) க்கு அமைவாக பாகுபடுத்தல்.

Analog கணினிகள்

இக் கணனிகள் பௌதீக இயல்பின் தொடர்ச்சியான அளவீடாகவே தகவலை உணர்ந்து கொள்கின்றன. இவற்றின் வெளியீடு (output) பொதுவாக வாசிப்பு அல்லது வரைபுகள் போன்ற வடிவத்திலிருக்கும் அழுத்தம் (Voltage) அமுக்கம் வேகம் மற்றும். வெப்பம் போன்ற பௌதீக இயல்புகள் / கணியங்கள் இந்த வகையில் அளவிடப்படக் கூடியவை உதாரணம்.

1) ஒரு பெற்றோல் நிரப்பும் நிலையத்திலுள்ள எரிபொருள் வழங்கி ஒரு anlage processor ஐ கொண்டது இது எரிபொருள் பாய்ச்சல் அளவீட்டை அதன் அளவறி வாசிப்புடனும் விலையுடனும் தொடர்பு படுத்தும்.

2) வாகன வேகமறிகருவி (வேகமானி)

b) Digital கணினிகள்.

இவை அதிவேகமான Program செய்யப்படக் கூடிய இலத்திரனியல் கருவிகளாகும். இவை கணித கணிப்பீடுகள் நடத்தல். பெறுமதிகளை ஒப்பிடல்.

பெறுபேறுகளை சேமித்தல் போன்றவற்றை நடத்தும். இவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னின் உயர் (on) அல்லது தாழ் (off) அழுத்த நிலைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் discrete signal ஐ எண்ணுவதால் / கணிப்பிடுதலால் தகவலை உணரும் எண்கள் எழுத்துகள் மற்றும். குறியீடுகள் அனைத்தும். "1" 0"" களால் பிரதிநிதித்துவப் படுத்துமளவிற்கு குறைக்கப்படலாம்.

Digital கணிகள் மேலும் பிரிவுக்குள் வகைப்படுத்தப்படுகிறது.

1) பொதுத்தேவை digital கணினிகள்
(theoretically) எந்தவொரு வகையான பிரயோகத்திற்கும் பயன்படுத்தக் கூடிய Digital கணினிகள் பொதுத்தேவை digital கணினிகள் எனப்படும்.

2) சிறப்புத் தேவைக் கணினிகள் குறித்த ஒரு தொழிலுக்கென தயாரிக்கப்பட்டு பயன்படுவனவாகும்.

பருமனுக்கு அமைவான பாகுபாடு
சூப்பர் கணினிகள்
சுப்பர் கணினிகள் பரவலாக விஞ்ஞானப் பிரயோகங்களாக வான் இயக்கவியல் வடிவமைப்பு (Aero Dynamic design) மற்றும். தலை முறையுரிமை தொடர்பான தகவலை Process செய்தல் வானிலைத் தகவல்களை சேகரித்தலும் Precoces செய்தலும் என்பவற்றை குறிப்பிடலாம்.

Mainframe கணினிகள்



கணினிகள் பொதுவக சுப்பர் கணினிகளை விடவும் வேகம் குறைந்தவை வலுக்குறைந்தவை மேலும் விலை குறைந்தவை.

Mainframe கணினிகள் தகவலை செக்கனுக்கு பல million ஆணைகள் என்ற வேகத்திலா process செய்யும். 1000 க்கு மேற்பட்ட வலுக்குறைந்த (remote) வேலைநிலையங்கள் (work stations) ஒரு வகையான mainframe கணினியால் உள்ளடக்கப்பட முடியும் பலபேரை முனைவுகளுடாக (terminal) ஒரே நேரத்தில் ஒரே கணினியை பயன்படுத்த இடமளிக்கும்.

தொழில் நுட்பமானது நேரப்பங்கீடு (time-sharing) எனப்படும் Main Frame ஆனது வங்கிகளாலும் பல வர்த்தவ தாபனங்களாலும். சரக்கிருப்பை மீள் ஒழுங்கு செய்தல் என்பவற்றிற்கு. பயன்படும்.

Mini கணினிகள் (சிறு கணினிகள்)

Mini கணினிகள் main frame கணினிகளை விடவும். சிறியவை. பொதுத்தேவைக் கணினிகள் பெரிய தொகுதிகளுடன் தொடர்பான தடை செய்யும். (Pronibitive) செலவில்லாமலே கணினி வலுவை கொடுக்கக் கூடியவை. mini கணினிகளின் பருமன் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு இலகுவாக கொண்டு செல்வதற்கு இடமளிப்பதில்லை. எனினும் main frame கணினிகள் விட இலகுவாக அசைக்கக் கூடியவை.

Mini கணினிகள் வர்த்தக தொழில் நுட்ப செயற்பாடுகளை வலுவான கணினிகளை விடவும். சிறப்பாக தொடர்புபடுத்தக் கூடியவை. (ஒன்றிணைக்கக் கூடியவை) இது பொதுவாக பாவனைக்கு இலகுவானது.

mini கணினிகள் கணக்கியல் சொல் (word) processing, தககவல் நிலைய முகாமைத்துவம் (data base management) சமூக விஞ்ஞானத்திற்கான புள்ளி விபரவியல் Packages கணினி உதவியிலான வடிவமைத்தல் (CAD) மற்றும் எண்ணியல் ஆராய்ச்சி போன்ற செயற்பாடுகளிற்கு வெகுவாக பழக்கப்பட்டவை.

சிறிய கணினித் தொகுதிகள்.
ஒரு Micro கணினித் தொகுதி என்பது அனைத்து கணினிகளிலும் மிகச் சிறியதும் மிக மலிவானதுமாகும். Micro எனும் அடைமொழி அதன் பௌதீக அளவையும். அதன் சுற்றுக்களையும் குறிப்பதேயன்றி அதன் தகமைகளையல்ல.

Micro கணினிகளளுக்கும் mainframe மற்றும் mini கணினிகளுக்கு மிடையிலான முக்கிய வித்தியாசம் யாதெனில் micro கணினிகள் மிகக் குறைந்த நினைவகம். மற்றும் குறைந்த வலுவுடையது. பௌதீகப் பருமன் குறைந்தது. குறைந்தளவு சுற்றயல் இணைப்புகளுக்கு இடமளிக்கும். micro கணினிகள் சொந்த / சுயதேவை (personal) கணினிகள் எனவும் அழைக்கப்படும்.

1.3 மென் பொருள்

இது கணினி நிகழ்ச்சிகளைக் குறிக்கும். (வன்பொருள் - இயந்திரத்தை - வேலைசெய்ய வைக்கும் ஆணைகள்) நிகழ்ச்சிகள் ஏற்றும் தொழிற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு மென்பொருட்கள் ஒருங்கு சேர பல வகைகளுக்குள் அடக்கப்படலாம்.

System software - தொகுதி மென் பொருள்
Application software - பிரையோக மென் பொருள்
Developmental software - விருத்திக்குரிய மென் பொருள்
Communication software - பரிமாற்ற மென் பொருள்

(தொடரும்..)

பாடசாலைக் கணினிப் பாடத்திட்டத்திற்கு அமைவாக, Computer Department, National Institute of Education இனால் வழங்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இத்தொடர் எழுதப்பட்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'டொஸ்' ஸின் வரலாறு

"DOS" முன்னணியில் எம்எஸ் டொஸ்

டிஸ்க் ஒப்பரேட்டிங் சிஸ்டம் (Disk Operating System) என்பதன் சுருக்கமே டொஸ் (DOS) என்று அழைக்கப்படுகிறது. இன்று 'டொஸ்' என்று குறிப்பிட்டாலே அது மைக்ரோசொ.:.ப்ட் நிறுவனத்



தயாரிப்பான 'எம்.எஸ் டொஸ்' ஒப்பரேட்டிங் சிஸ்டத்தையே குறிக்கிறது. ஆனால் தொடக்க காலத்தில் ஆப்பிள் II கம்ப்யூட்டர்களில் பயன்படுத்தப்படட ஒப்பரோட்டிங் சிஸ்டம் தான் டொஸ் என்று அழைக்கப்பட்டு வந்தது. (1970 களின் இறுதிக் கட்டங்களில்).

1980 ஆம் ஆண்டு ஐபிஎம் நிறுவனம் இன்டெல் 8088 அடிப்படையிலான பெர்சனல் கம்ப்யூட்டரை அறிமுகம் செய்தபோது, அதில் டிஜிட்டல் எக்யூப் மென்ட் நிறுவனத்தின் (DEC) கேரி கின்டால் (Gary Kindall) என்பவர் உருவாக்கிய சிபி/எம் (CP/M - Control Program for Microprocessor) என்ற ஒப்பரேட்டிங் சிஸ்டம் செயல்பட்டது. இன்டெல் நிறுவனம் 8086 புரொசசரை அறிமுகப்படுத்திய போது, ஐபிஎம் நிறுவனம் டிஜிட்டல் எக்யூப்மென்ட் நிறுவனத்திடம் ஒரு புதிய ஒப்பரேட்டிங் சிஸ்டத்தை வடிவமைத்துத் தருமாறு கேட்டது. டெக் நிறுவனத்திற்கு அப்பணியில் ஈடுபாடு இல்லை.

இக்கால கட்டத்தில் சியாட்டில் கம்பியூட்டர் பிராடக்ட்ஸ் (Seattle Computer Products) நிறுவனத்தின் டிம் பேட்டர் சன் (Tim Patterson) 8086 புரொசசருக்காக 'சியூடொஸ்' (QDOS - Quick and Dirty Oerating System) என்னும் ஒப்பரேட்டிங் சிஸ்டத்தை வடிவமைத்து வைத்திருந்தார். மைக்ரோசா.:.ப்ட் நிறுவனம் கியூடொஸ் இன் உரிமையைப் பெற்றது, அதனை செழுமைப்படுத்தி பிசி டொஸ் 1.0 (PC DOS 1.0) என்ற பெயரில் உருவாக்கி ஐபிஎம் நிறுவனத்துக்கு தந்தது. 1981 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்திலிருந்து ஐபிஎம் பிசிக்கள் பிசி டொஸ் 1.0 ஒப்பரேட்டிங் சிஸ்டத்துடன் விற்பனைக்கு வந்தன.



டொஸ் இன் முகப்புத் தோற்றம்.

ஏற்கனவே ஆப்பிள் II கம்ப்யூட்டர்களில் DOS ஒப்பரேட்டிங் சிஸ்டம் இருந்த காரணத்தால் மைக்ரோசொ.:.ப்ட் தன்னுடைய சிஸ்டத்துக்கு பிசி - டொஸ் என்று பெயரிட்டது. 1985 ஆண்டில் ஆப்பிள் புரோடொஸ் (ProDOS) சிஸ்டத்தை அறிமுகப்படுத்தியது. ஐபிஎம் பிசிக்களுடன் ஆப்பிள் II போட்டியிட முடியவில்லை ஆனால் 1984 ல் ஆப்பிள் நிறுவனம் அறிமுகப்படுத்திய 'மெக்கின்டோஸ்' (Macinntosh) கம்ப்யூட்டர்கள் வரவேற்புப் பெற்ற காரணத்தால் ஆப்பிள் நிறுவனம் 'டொஸ்' சிஸ்டத்தைத் தொடரவில்லை.



மைக்ரோசா.:.ப்ட் நிறுவனம் தொடர்ந்து தன்னுடைய டொஸ் ஒப்பரேட்டிங் சிஸ்டத்தை புதுப்பித்து வந்தது. (அட்டவணையைக் காண்க). ஐபிஎம் நிறுவனத்துடன் ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டபின் மைக்ரோசொ.:.ப்ட் நிறுவனம் 'எம்எஸ் டொஸ்' என்ற பெயரிலேயே தன்னுடைய சிஸ்டத்தை வெளியிடத் தொடங்கியது. தனக்கென ஒரு ஒப்பரேட்டிங் சிஸ்டம் வேண்டும் எனக் கருதிய ஐபிஎம் நிறுவனம் அதனுடைய சொந்த ஒப்பரேட்டிங் சிஸ்டத்தை 'பிசி டொஸ்' என்ற பெயரிலேயே வெளியிட்டது. டெக் நிறவனமும் சிபி/எம் சிஸ்டத்தைத் தொடர்ந்து 'டிஆர் டொஸ்' (DR DOS) என்ற பெயரில் தன்னுடைய ஒப்பரேட்டிங் சிஸ்டத்தை வெளியிட்டு வந்தது.

'நெட்வேர்' சிஸ்டத்தின் மூலம் புகழ் பெற்ற, நாவெல் (Novell) நிறுவனம்,

தொடர்...40ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16ம் பக்க தொடர்ச்சி......

பில்கேட்ஸை அழைத்தது. இந்த நிறுவனத்தில் வேலை செய்து கொண்டே, நிறைய நேரம் கம்ப்யூட்டருடன் நேரத்தை செலவழித்து புதுப்புது வழிமுறைகளைக் கண்டுபிடித்தனர். வருமானமும் முதல் முறையாகக் கிடைத்தது. பின்பு Traf Data என்ற கம்பனியில் Traffic ஓட்டத்தைக் கணக்கிடும் புரோகிராம் எழுத வாய்ப்பு கிடைத்தது. அதனை திறம்பட முடித்துக் கொடுத்தார்கள் இதன் மூலம் 20,000 டொலர் வருமானம் கிடைத்தது.



1973ஆம் ஆண்டு பில்கேட்ஸ் Harvard university இல் கல்லூரிப் படிப்புக்காகச் சேர்ந்தார். பள்ளி நிர்வாகத்தைக் கண்காணித்துச் செயல்படுத்தும் புரோகிராமை எழுத்தித் தரும் வாய்ப்புக் கிடைத்தது. பால் ஆலனின் உதவியோடு எழுதி முடித்தார் கல்லூரி நாட்களின் இறுதியில் தங்களது கம்ப்யூட்டர் ஆர்வத்தை அறிவை எங்கெல்லாம் பயன்படுத்தலாம் என்று தேடித் தேடிப் பயன்பெற்றனர்.

Microsoft தொடக்கம்

பில்கேட்ஸ் பால் ஆலனும் சேர்ந்து கம்பனி ஒன்றை சொந்தமாகத் தொடங்க முடிவு செய்தனர். 1974 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் popular electronics என்ற பத்திரிகையில் கீழ்க் காணும் வாசகம் இடம் பெற்றிருந்தது. "உலகத்தின் முதல் மைக்ரோ கம்ப்யூட்டர் கிட்" கம்ப்யூட்டர் களின் வளர்ச்சி ஆரம்பமாகி விட்டது அதற்குத் தேவையான புரோகிராம்களும் Software களும் உடனடியாக எழுதப்பட வேண்டும் என்ற உண்மையைப் புரிந்து கொண்டனர்.



Altair 8800 என்ற Micro Processer இன் உதவியுடன் உருவாக்கப்பட்டிருந்த அந்த மைக்ரோ கம்ப்யூட்டரைப் பற்றி விபரமாக படித்துத் தெரிந்து கொண்ட புரோஸஸரின் உதவியுடன் உருவாக்கிய மைக்ரோ கம்ப்யூட்டரின் உரிமையாளர் தனது கம்பனியான MTS என்ற கம்பனி உருவாக்கிய கம்ப்யூட்டரில் BASIC மொழி நன்கு செயற்படத் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து 1975ம் ஆண்டு Microsoft நிறுவனம் தொடங்கப்பட்டது. இவ் நிறுவனம் மெல்ல மெல்ல புதுப்புது Software களையும் கம்ப்யூட்டர் மொழிகளையும் உருவாக்கியது.

Microsoft இன் வழர்ச்சி

1975 ஆம் ஆண்டு நியூ மெக்ஸிகோவில் பில்கேட்ஸ் மற்றும் அவர்களது நண்பர் பல் ஆலனால் தொடங்கப்பட்ட Microsoft நிறுவனத்தில் இருந்து BASIC என்கிற மொழியே முதன் முதலாக MITS, NCR மற்றும் INTEL போன்ற நிறுவனங்களுக்கு விற்கப்பட்டது. Microsoft விற்பனை செய்த BASIC மொழி விலை குறைவாக இருந்ததால் நல்ல வரவேற்பு கிடைத்தது. 1979 ஜனவரி 1ம் திகதி மெக்ஸிகோவில் இருந்து வாஷிங்டனுக்கு அலுவலகத்தை மாற்றியது. அப்போது அதில் வேலை செய்தவர்களின் எண்ணிக்கை 16

திறமை உள்ளவர்கள் மட்டுமே தேர்ந்தெடுத்தார் முன் அனுபவம் தேவையில்லை என்றே நினைத்தார் குறைந்த அனுபவம் உள்ளவர்களைத் தேடித்தேர்ந்து தனது விருப்பத்துக்கேற்ப மாற்றிக் கொண்டார் அனுபவத்தை விட திறமைக்கே முன்னிரிமை கொடுத்தார்.

1981 ஆம் ஆண்டு IBM நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டு அவர்களது கம்ப்யூட்டர்களுக்கு ஒப்பிரேட்டிங் சிஸ்டங்களை எழுத்தித்தர முடிவு செய்தார் அதன் படி 1981ம் ஆண்டில் MS - DOS என்கிற ஒப்பிரேட்டிங் சிஸ்டத்தை உருவாக்கி IBM ன் கம்ப்யூட்டர்களுக்கான பிரத்தியோகமான ஒப்பிரேட்டிங் கிஸ்டமாக்கினார்

1983 ஆம் ஆண்டு Microsoft நிறுவனம் மவுசை கண்டு பிடித்தது ஏப்ரல் மாதம் மவுஸ் கண்டுபிடிக்கப்பட்டது

தொடரும்.........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5ஆம் பக்கத் தொடர்ச்சி...

ஜாவா ஸ்கிரிப்ட் ஜாலம்!

```
var sdfrom=-20;
var sdto=20;
var yspeed=8;
var xspeed=4;
var explode=24;
var pcol='ff0000';
var tpause=20;
var schar='.';
*/

var x1, x2, y2;
var t=0;

t = pcol.length;
for (var i=0; i<6-t; i++) pcol = '0'+pcol;

if (sxfrom>sxto) { t=sxto; sxto=sxfrom; sxfrom=t; }
if (syfrom>syto) { t=syto; syto=syfrom; syfrom=t; }
if (sdfrom>sdto) { t=sdto; sdto=sdfrom; sdfrom=t; }

if ((document.all) && (!bw.opera5)) {
  movy = document.body.clientHeight-64;
  movx = document.body.clientWidth-50;
} else {
  movx = window.innerWidth-50;
  movy = window.innerHeight-64;
}

ox = new Array();
oy = new Array();
sx = new Array();
sy = new Array();
ds = new Array();
pa = new Array();

t = maxitems;
for (var i=0; i<maxitems; i++) {
  if (bw.ns4) document.writeln("<layer id='s"+i+"'>");
   else document.writeln("<div id='s"+i+"' style='position:absolute; z-index:3;'>");
  document.writeln('<font color=#'+pcol+' face="'+fontface+'" size="'+fontsize+'">'+schar+'</font>');
  if (bw.ns4) document.writeln("</layer>");
   else { document.writeln("</div>");   }
}

setTimeout("run()",tpause,"JavaScript");


//DO NOT MODIFY
/*
<APPLETINFO>
appletname=jsfireworks
applettype=JAVASCRIPT
created=1049182071560
appletfilename=jsfireworks1.js
</APPLETINFO>
<JAVASCRIPT>
fontsize=6
maxitems=20
sxfrom=30
sxto=60
syfrom=20
syto=50
sdfrom=-20
sdto=20
yspeed=8
xspeed=4
explode=24
tpause=20
schar=.
fontface=0
pcol=255
</JAVASCRIPT>
<HTMLGENERATOR>
null</HTMLGENERATOR>
*/

</SCRIPT>
</body>

</html>
```

காட்சி அமைப்பு







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணினியில் டிஜிட்டல் கமரா



தற்போது நடைமுறையில் சாதாரணமாக கமராவை பயன்படுத்தி புகைப்படங்களை எடுப்பது குறைந்து வருகின்றது இதற்கு காரணம் தகவல் தொழில் நுட்ப விருத்தி ஆகும் புதிய வரவான பிலிம் இல்லாத டிஜிட்டல் கமரா தான்.

சாதாரண கமராவில் பிலிமைப் போட்டு புகைப்படம் எடுக்கின்றோம் ஆனால் டிஜிட்டல் கமராவில் சிசிடி என்ற மீடியாவை பயன்படுத்தி படம் பிடிக்கின்றோம் இந்த சிசிடியில் விழுகின்ற படத்தை உடனடியாக பயன்படுத்திக் கொள்ள முடியும் படத்தை சீர் செய்ய வேண்டிய தேவை இல்லை



டிஜிட்டல் கமரா மூலம் எடுக்கப்படும் புகைப்படத்தை கம்ப்யூட்டரில் இணைந்து கமராவில் படத்தை கம்ப்யூட்டருக்கு அனுப்ப வேண்டும் பின்பு நமக்கு தேவையான படங்களை நம்முடைய கம்ப்யூட்டரில் வைத்துப் பாதுகாக்கலாம். இவ்வகையான கமராக்களை பார்ப்பதற்கு சிறியதாக இருந்தாலும் இதன் பயன்கள் நிறைவாக உள்ளது. எப்சன், சினான், கசியோ போன்ற கமரா தயாரிப்பு நிறுவனங்கள் இந்த டிஜிட்டல் கமராவை பெருமளவில் உற்பத்தி செய்யத் தொடங்கி விட்டன.



இந்த கமராவின் நினைவகத்தில் மொத்தம் 96 படங்கள் வரை பதியலாம். இதை தொலைக்காட்சி வீடியோ ரிகார்டர் விடியோ பிரின்டர் ஆகியவற்றில் இணைத்து படங்களைக் காணலாம். சில வகை டிஜிட்டல் கமராக்களில் கம்ப்யூட்டரில் இருந்து கூட நேரடியாக படங்களை எடுக்க வசதிகள் உள்ளன இன்னும் பல டிஜிட்டல் கமராக்களில் உருவங்கள் பதிவு செய்து பயன்படுத்தலாம் இதே போல் இம்பக்ட் ∴ பிளாஷ் காட்டுகள் மூலம் தேவையான இடத்துக்கு உடனடியாக அனுப்பலாம். இவ்வகையான டிஜிட்டல் கமராக்கள் உடனடி ரிப்போட்டர்களுக்காக பத்திரிகைத் துறையிலும் தொலைக்காட்சித் துறையிலும் அதிகம் பயன்படுத்தப்படுகின்றது. இருப்பினும் இன்னும புதிய கண்டு பிடிப்புக்கள் மூலம் இந்த கமராக்களின் விலை குறைந்து மக்கள் எல்லோரும் பயன்படுத்தும் வகையில் வெளிவர இருக்கின்றது. அந்த நாள் வெகு தொலைவில் இல்லை என்றே கூறலாம்.

பதினேழு ஹொட் கீகளுடன் Microsoft விசைப்பலகை

மைக்ரோசொப்ட் நிறுவனம் புதிய வயர்லெஸ் விசைப்பலகை மவுஸ் கருவிகளை வெளியிட்டுள்ளது. மைக்ரோசொப்ட் விசைப்பலகை பணிச் சூழலுக்கு ஏற்ற வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. தட்டச்சு செய்யும் போது கை ,மணிக்கட்டில் உண்டாகும் வலி தவிர்க்கப்படும். இதில் அமைக்கப்பட்டுள்ள பதினேழு ஹோட் கீகளை தேவைக்கேற்ப செயற்படுத்தி பார்க்க ஐ கீஞர்கீஸ் மற்றும் ஐவீல் வோர்க்ஸ் மென் பொருள் வழங்கப்படுகின்றது கப்ஸ் ரம் ஸ்கரோல் லொக் விசைகளை அழுத்தினால் திரையில் அது குறித்த அறிவிப்பை மென்பொருள் வெளியிடும் ஆம் கெட் மவுஸ் ஸ்கோரல் சக்கரத்துடன் பிற கருவிகளை விட முப்பது விழுக்காடு வேகத்தில் இயக்கக் கூடிய ஆம் கெட் விசைப்பலகை மட்டும் மவுஸ்கருவிகளை வயர்லெஸ் முறையில் இரண்டு மீட்டர் தொலைவிலிருந்தே இயக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இணையப் பல்கலைக் கழகம்.

Tamil Virtual university

"தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்."

தமிழ் இணையப் பல்கலைக் கழகமானது தமிழ் TAB எழுத்துருவில் அமைக்கப்பட்டுள்ளது. இவ் இணையத் தளத்தைப் பார்க்க உங்கள் கணினிக்கு TAB எழுத்துருவை வலையிறக்கம் செய்து கொள்ளும் வாய்ப்பு தளத்தின் முகப்புப் பக்கத்திலேயே தரப்பட்டுள்ளது. இந்த வலைத்தளத்தை **www.tamilvu.org** என்ற முகவரியில் காணலாம்.



தமிழ் மக்கள் ஒரு மொழியினர் பல நாட்டினர் எல்லா நாட்டிலும் சிறுபான்மையார் உலகின் நாற்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் பரவிவாழும் தமிழர்கள் தங்களுடைய மரபுகளையும் விழுமியங்களையும் பண்பாட்டையும் பாதுகாக்க வேண்டும். இத் தேவையை நிறைவேற்ற அவர்கள் தங்கள் மொழி, கலை, இலக்கியம் இவற்றோடு தொடர்பு நீங்காது வாழ வேண்டும்.

உலகு தழுவி வாழும் தமிழ் மக்களின் பண்பாட்டுத் தேவைகளை மனத்திற் கொண்டு தமிழக முதல்வர் அவர்கள் 1999ல் நடைபெற்ற தமிழ் இணைய மாநாட்டின் நிறைவு விழாவில் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்படும் என அறிவித்தார் அதை நிறைவேற்றும் வகையில் இத் தமிழ் இணையப் பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டிருக்கின்றது.

நோக்கம்

தமிழ் இணையப் பல்கலைக்கழகம் உலகில் வாழும் தமிழ் மக்களுக்கும் தமிழ் மொழியில் ஈடுபாடு உள்ள மற்றையோருக்கும் தமிழ் மொழியைக் கற்கவும் தமிழர் வரலாறு கலை இலக்கியம் பண்பாடு பற்றி அறிந்து கொள்ளவும் வேண்டிய வாய்ப்புக்களை இணையம் வழியாக அளிக்கும் நோக்கத்தைத் தன்னுள் கொண்டது.

குறிக்கோள்

உலகளாவிய தமிழ் சமுதாயத்தினர்க்கும் தமிழியலில் ஈடுபாடுள்ள மற்றையோருக்கும் தமிழ் மொழி இலக்கியம் பண்பாடு பற்றிய கல்விச் சாதனங்களை உருவாக்கி இணையம் வழியாக அளித்தல்.

பார் தழுவி வாழும் தமிழர்கட்கு அவர்கள் தேவைக்கேற்பப் பாடத்திட்டங்களை உருவாக்கி அளித்தல் அவர்கள் தங்கள் பாரம் பரியத் தோடு தொடர்பு கொண்டு வாழத்துணைபுரிதல்

உலகின் பலநாடுகளில் வாழும் தமிழர்கள் உருவாக்கும் கல்வியறிவுச் சாதனங்களைத் தொகுத்து அவற்றைப் பரவலாகத் தமிழ் மக்களுக்கு வழங்கும் முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளுதல்.

தமிழ் மொழி. இலக்கியம் பண்பாடு தொடர்பான பாடத்திட்டங்களை வகுத்தல் கேள்வியறிவுக்காகவோ அல்லது சான்றிதழ் பட்டம் பெறுவதற்காகவோ. கற்போருக்கு இப்பாடங்களை கற்க வாய்ப்பளித்தல் உரிய நியமங்களை நிறைவு செய்தோருக்கு அவர்கள் கற்ற பாடங்களின் தகுதிக்கு ஏற்ப தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் வழியாகச் சான்றிதழ் பட்டம் வழங்க ஏற்பாடு செய்தல்.

பயனர் வகைமை

ஒருவர் த.இ.ப இணையத்தளத்தைப் பார்வையிட கீழ்க்கண்ட உறுப்பினர் வகைகளில் சேரலாம்.

காண்போர்

இணையத்தளத்தில் பதிவு செய்வோர் அனைவரும் காண்போராவர் காண்போர் திட்ட விவரங்கள் பற்றியும் அறியவும் மாதிரித் தளப் பொருள்கள் சிலவற்றைப் பார்க்கவும் இயலும் காண்போராகப் பதிவு செய்யக் கட்டணமில்லை.

அறிநர்

பாடத்திட்டங்களில் இடம் பெறும் பாடங்கள் எவற்றுக்கோனும் கட்டணம் கட்டி அப்பாடப் பொருள் பற்றிய அறிவுபெறும் நோக்கத்தோடு ஒருவர் அறிநராகப் பாடத்திட்டத்தில் சேரலாம்.

மாணவர்

த.இ.ப கல்வித்திட்டத்தின் கீழ் வழங்கும் பாடத்திட்டம் ஏதற்கேனும் கட்டணம் கட்டி மாணவராகச் சேரலாம். மாணவர்கள் கட்டணமின்றி நூலகத்தைப் பயன்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலக உறுப்பினர்

ஆண்டுக் கட்டணம் அல்லது ஆயுள் கட்டணம் செலுத்தி ஒருவர் த.இ.ப நூலக உறுப்பினராகலாம். நூலக உறுப்பினர்கள் பாடப்பிரிவுக்குள் செல்ல இயலாது.

பணித்திட்டங்கள்

த.இ.ப வின் பணித்திட்டம் பல்வகைப்பட்டவை இணையவழிக் கல்வித்திட்டங்கள் மின் நூலகம், கணித்தமிழ் வளர்ச்சி பலவற்றைக் கொண்டுள்ளது.



படம் / Fig. 3

1) கல்வி திட்டம்
2) மின்நூலகம்.

(1) கல்வித் திட்டம்

கல்வித் திட்டத்தின் கீழ் தமிழ்கல்வி அரிச்சுவடி முதல் ஆராய்ச்சிவரை இணையவழி வழங்கப்படுகிறது. இதில் பயனர் தமிழ் பிரசிறப்புப் பாடப் பயிர்ச்சிகள் பலவும் இடம் பெறுகின்றன.

I சான்றிதழ்க் கல்வி
- i அடிப்படை நிலைப்பாடங்கள்
- ii இடைநிலைப்பாடங்கள்
- iii மேல்நிலைப்பாடங்கள்

II உயர் கல்வி
- i பட்ட பட்டையக் கல்வி
- ii முதுநிலை (தமிழியல்) கல்வி
- iii ஆய்வுக் கல்வி

III தேர்வு முறை
- i இணையவழித் தேர்வு
- ii நேர்முகத் தேர்வு.

(2) மின் நூலகம்.

தமிழ் இணையம் பல்கலைக் கழகத்தின் மின் நூலகம் தமிழ் இணையப் பாடத்திட்டத்தில் சேர்ந்து பயில்வோர் மற்றும் உலகு தழுவி வாழும் தமிழர்கள் அனைவரது பயன் பாட்டிற்காகவும் உலுவாக்கப்பட்டுள்ளது. இம்மின் நூலகத்தின் நூல்கள் அகராதியில் பிறபார்வைக் கூறுகள் என 3 பிரிவுகள் உள்ளன.

I *நூல்கள்*
II *அகராதிகள்*
III *பிறபார்வைக் கூறுகள்*

நூல்கள்

இந்தப் பிரிவில் சங்ககாலம் முதற் கொண்டு இன்று வரை படைக்கப்பட்டுள்ள இலக்கிய இலக்கண நூல்கள் அனைத்தும் உள்ளன இந்த மின் நூல்களின் சிறப்பு நூலகத்திலுள்ள நூல்களின் பாகு பொருள் தொடுபொருள் போன்றவற்றை எளிய முறையில் தேடிப் பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டு இருப்பதாகும். இவ்வசதி ஆய்வாளர்களுக்குப் பெரும் உதவியாக இருக்கும்.

அகராதிகள்

தமிழ் தமிழ் பிறமொழிகள் பிறமொழிகள் தமிழ் நிகண்டுகள் போன்ற பல அகராதிகள் இடம் பெறுகின்றன இப்போதைக்குக் கீழ்க் காணும் அகராதிகள் இணையத்தளத்தில் இடம் பெறுகின்றன.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் பேரகராதி
சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆங்கிலத் தமிழ் அகராதி
பழனியப்பா சகோதரர்களின் பால்ஸ் என்னும் ஆங்கிலத் தமிழ் அகராதி
மு.சண்முகம் பிள்ளை அவர்களின் தமிழ் தமிழ் அகராதி.

பிறபார்வைக் கூறுகள்

கலைச் சொல் பிரிவில் கலை, அறிவியல், பொறியியல், மருத்துவம், வேளாண்மை, சட்டம், தகவல் தொழில் நுட்பம் போன்ற பல் துறைகளின் கலைச் சொற்கள் இடம் பெறகின்றன இப்போதைக்கு இரண்டு இலட்சம் கலைச் சொற்கள் வரை தளத்தில் இடப்பட்டுள்ளன.

தொடர்பு

தமிழ் இணையப்பல்கலைக் கழகம்.
4வது மாடி எல்னெட் மென்பொருள் நகரம்
தரமணி, சென்னை - 600113
தொ.பே: 2254 1010, 2254 1012, 2254 1013
தொ.நகலி: 2254 10111
மின் முகவரி: tamilvu@vsnl.com

சிரிப்ஸ். . .

512 MB RAM வாங்கிப் போட்டும் என் பையனுக்கு மெமறி பத்தல என்ன செய்யலாம்?.

கவலப் படாதீங்க. இப்பதான் 1 GB RAM வந்திருக்கே!...

- கார்க்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 in 1 வசதியோடு MFD

-இந்தியாவிலிருந்து பார்த்தசாரதி



பிரிண்டர், ஸ்கானர், கொப்பியர், ஃபக்ஸ் என ஒவ்வொரு வேலைக்கும் ஒவ்வொரு கருவியை வாங்கிய காலம் மலை யேறிக் கொண்டிருக்கிறது. இந்த எல்லா வேலைகளையும் ஒரே கருவியே செய்து முடித்து விடும். Multi Function Device (MFD) என அழைக்கப்படுகிற இது முன்பே வெளி வந் தாலும் இப்பொழுதுதான் மிகவும் பிரபலமாகி வருகிறது.

பல நிறுவனங்கள், பல மொடல்களை மலிவான விலைகளில் விற்கின்றன. இந்த விற்பனைப் போட்டியின் காரணமாக விலை கள் குறைந்து கொண்டே வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயம்.

கடந்த மாதம் 30ஆம் திகதி இந்தியப் பண மதிப்பில் ரூபா 5990 விலைக்கு விற்கப்பட்ட MFD அடுத்த நாள் ரூபா 4990 விலைக்கு கணினிச் சந்தையில் விலை வீழ்ச்சி யைச் சந்தித்திருக்கிறது.

ஏன் MFD கருவிக்கு இவ்வளவு பிரபலம்?

அதிக இடத்தைப் பிடிக்காது என்பது முக்கிய காரணம். தனித்தனியாக பிரின்டர், ஸ்கானர், கொப்பியர் மற்றும் ஃபக்ஸ் கருவிகளை நீங்கள் வாங்கியிருந்தால் அவற்றை வைக்க நிறைய இடம் தேவை. இந்த நான்கும் அடங்கிய MFDக்கு மிகக் குறைந்த இடம் போதுமானது.

அடுத்த காரணம் விலை. இந்த நான்கையும் தனித்தனியாக வாங்க ஏராளமாக நீங்கள் செலவழிக்க வேண்டியிருக்கும். ஆனால், குறைந்த விலையில் இந்த நான்கு கருவிகளும் அடங்கிய MFDயை வாங்கலாம்.

பயன்படுத்தும்பொழுது ஆகிற செலவு MFDயில் குறை வதும் மற்றொரு காரணம். இந்த கருவிகள் தனியாக இருந்தால் இங்க் கார்ட்ரிட்ஜ், டோனர், தெர்மல் காகிதம் என ஒவ்வொன்றிற்கும் தேவையானவற்றை வாங்கவேண்டும். MFDடியில் இங்க் கார்ட்ரிட்ஜ் அல்லது டோனர் போக, சாதாரண காகிதமே போதுமானது.

லேசர் பிரிண்டரை அடிப்படையாகக் கொண்ட MFD, இங்க்ஜெட் பிரிண்டரை அடிப்படையாகக் கொண்ட MFD என இரு வகையான MFDக்கள் உள்ளன. முந்தையதின் விலை இந்தியப் பண மதிப்பில் ரூபா 25,000 முதல் 50,000 வரையில் ஆகலாம். பிந்தையதின் விலை ரூபா 5,000 முதல் 25,000 வரையில் ஆகலாம்.

ஒரு MFDயை வாங்கும்போது நீங்கள் கவனிக்க வேண்டிய அம்சங்களைப் பாருங்கள்.

பிரிண்டருக்கான தெளிவு (Resolution) அதிகமாக இருக்க வேண்டும். அதுபோல் ஸ்கானர், ஃபக்ஸ் மற்றும் காப்பியருக்கான தெளிவுகளும் அதிகமாக இருக்க வேண்டும்.

Letter, Legal, Executive, A4,A5,A6,B5,B6 போன்ற பல அளவு காகிதங்களைப் பயன்படுத்தக் கூடிய வகையில் MFDஇருக்க வேண்டும். அஞ்சல் அட்டைகள் கடித உறைகள் போன்றவற்றில் அச்சடிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

இங்க் கார்ட்ரிட்ஜால் அல்லது டோனரால் அதிகபட்சமாக எவ்வளவு பக்கங்களைஅச்சிட முடியும் என்பதை கேளுங்கள்.

ஸ்கானரால் ஸ்கான் செய்யப்படுகிற வண்ண அளவு அதிக பிட்டுகளில் இருக்க வேண்டும். Color depth எனக் குறிப் பிடுகிற இந்த அளவு 24 அல்லது 36 அல்லது 48 பிட்டுகளில் உள்ளன.

ஃபக்ஸ் வசதி கொண்ட எம்எப்டியில் உள்ள மோடத்தின் வேகம் அதிகமாக இருக்க வேண்டும். பொதுவாக 33.6 டுணீஞுண் வேகம் கொண்ட மோடம் காணப்படும்.

வண்ணத்தில் பேக்ஸ் அனுப்ப முடியுமா என்பதை கவனியுங்கள்.

அதிக பேக்ஸ் பக்கங்களை நினைவகத்தில் வைக்கிற ஆற்றல், பேக்ஸ் வசதி கொண்ட MFDக்கு இருக்க வேண்டும். 100 முதல் 500 வரையிலான பக்கங்களை நினைவகத்தில் பதிக்கிற MFDக்கள் உள்ளன.

சொப்ட்வெயார் மூலமாக கண்காணிக்க, கட்டுப்படுத்த, தூய்மை செய்யும் வசதிகள் உள்ளனவா எனப் பாருங்கள். பிரின்டரின் டோனர் அல்லது இங்க்கின் அளவு காட்டுகிற வசதி சொப்ட்வெயரில் இருக்க வேண்டும். ஹெட்டை சொப்ட் வெயர் மூலம் துடைக்கிற வழி உள்ளதா என்பதைப் பாருங்கள். லேசர் பிரின்டரின் டிரம்மை (Drum) துடைக்கிற வழியும் இருக்க வேண்டும்.

MFDயில் உள்ள பட்டன்கள், விளக்குகள் எவ்வளவு, என்ன வேலைகளுக்காக அவை உள்ளன எனப் பாருங்கள். ஃபக்ஸ் இயந்திரத்தில் வேகத்துக்கான டயல், ஒலிக்கான அளவை கூட்ட குறைக்க கொண்ட்ரோல் தொலைபேசி புத்தகம், தெளிவைக் கூட்ட குறைக்க கண்ட்ரோல் ஆகியவை இருக்க வேண்டும். பிரதிகளின் எண்ணிக்கை, கொண்ட்ராஸ் ட்டை கூட்ட குறைக்க கொண்ட்ரோல், காகித அளவைத் தேர்வு செய்ய பட்டன், ஷூம் (Zoom) வசதி ஆகியவை கொப்பியரில் இருப்பது நல்லது.

டூப்ளக்ஸ் (Duplex) பிரிண்டிங், டூப்ளக்ஸ் ஸ்கானிங் நெட்வொர்க்கில் இருந்து ஸ்கேனிங் செய்தல், பிளாஷ் மெமரிக்கான வாயில்கள் போன்ற கூடுதல் அம்சங்கள் MFDயில் இருந்தால் நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விளக்கம்

Calculator கூட்டல், பெருக்கல், கழித்தல், வகுத்தல் ஆகிய கணக்கியல் பிணக்குகளை கல்குலேட்டர் செய்யும் கருவி உருவானதால் இதற்கு கல்குலேட்டர் என்ற பெயர் வந்தது. தமிழில் இதனை "கணிப்பான்." என அழைக்கப்படுகிறது எண்களை கணிப்பதால் எளிமைத் தமிழில் கணிப்பான் என அழைக்கப்படுகிறது.

Computre கணக்குகளையும் தகவல்களையும் தொகுத்து செயல் முறைகளின் முடியவில் சிக்கல்களை தீர்க்கும் கருவியாக உள்ளது கணக்கும் தகவல்களும் முறையா நினைவுத்திறனுடன் கையாளப்படுவதால் கம்ப்யூட்டர் என்ற பெயரை பெற்றது. கணிதத்தை எளிமைப்படுத்துவதை அறிந்த தமிழறிஞர்கள் இதனைப் கணிப்பொறி என அழைக்கத் தொடங்கினர் இலங்கையில் கணனி என அழைக்கப்படாது தற்போது சுருக்கமாக செல்லமாக கணினி என அனைவராலும் அழைக்கப்டுகிறது.

Printer கணினியில் தொகுக் கப்பட்ட கணக்குகள் மற்றும் தகவல்களை காகித்ததில் அச்சடித்து பார்க்க உதவும் எந்திரமே பிரிண்டர் என அழைக்கப்படுகிறது பிரிண்டரில் பல வகைகள் உள்ளன அச்சு எடுக்க இந்த எந்திரம் பன்படுவதால் தமிழில் அச்சுப் பொறி என அழைக்கப்படுகிறது கணினியில் செய்ததை உள்ளதை உள்ளபடியோ அல்லது நம்முடைய கட்டளைக்கேற்றடிபயோ அச்சுப் பொறி அச்சடித்துத் தரும்.



KeyBoard கம்ப்யூட்டரினுள் தகவல்களையும் எண்களையும் கட்டளையும் டைப் அடித்து தொகுக்க உதவும் சாதனமே கீபோர்ட் ஆகும் ஒரு மின்னணு பலகையில் எடுத்து எண் மற்றும் சிறப்பு குறியீட்டு கீக்கள் பதிக்கப்பட்டிருப்பதால் இது கீ போர்டு என அழைக்கப்படுகிறது. கீ என்பது. தழிழில் விசை என புழக்கத்திலுள்ளதால். இந்த உபகரணம் விசைப்பலகை என அழைக்கப்படுகிறது.

Monitor விசைப்பலகையில் நாம் டைப் அடிக்கும் எழுத்துக்களை ஒளித்திரையில் காட்டும் சாதனம் இது கிட்டத் தட்ட தொலைக் காட்சிப் பெட்டியை போன்றதே கணினியில் மேற்பார்வைச் சாதனமான இக்கருவி தமிழில் திரையகம் என அழைக்கப்படுகிறது.

Mouse: பொதுவாக வீட்டிலுள்ள எலிகள் ஒரு போதும் சும்மா இருக்காது இங்கேயும் அங்கேயும் ஓடிக் கொண்டிருக்கும் அதே போல் கம்ப்யூட்டரில் ஒரு புத்தகத்தில் எந்த இடத்திற்கும் செல்ல எமக்கு நேரம் அதிகம் பிடிக்கும் ஒரு பக்கத்தின் எந்த இடத்திற்கும் நம் நகன்று சென்று பணிகளை விரைவாக்குவதால் இக்கருவிக்கு (எலி போல) மவுஸ் என்ற பட்டம் கிட்டியுள்ளது. ஆரம்ப காலங்களில் இதனை எலி, சுட்டெலி, சுட்டுநுன் பொறி என தமிழில் அழைக்கப்பட்டாலும் தற்போது சுட்டி என்றே பலரும் அழைக்கிறார்கள்.

Curso கம்ப்யூட்டரில் டைப் அடிக்கும் அடுத்த எழுத்து மானிடரில் எங்கோ தோன்றும் என்பதை மினுக்கி காட்டும் குறியீடு என இதை அழைக்கலாம் மேலும் கம்ப்யூட்டரில் நாம் வேலை செய்து கொண்டிருக்கும் போது நாம் எந்த இடத்தில் இருக்கின்றோம் என்பதை அடையாளம் காட்டும் குறியீடு என்றும் கூறலாம் இது ஒரு அடையாளக் குறியீடாக இருப்பதால் பலரும் இதனை காட்டி என அழைக்கிறார்கள்.

Joystick கீ போர்டு, மவுஸ் போன்று கணினிக்காக ஒரு உள்ளீட்டு கருவியாகும் மவுஸைக் கொண்டு புரோக்கிராமிங் பணிகளுக்கு நாம் எளிமையாக நகற்றி பயன்படுத்திக் கொள்ளலாம் அதேபோல் கையால் பிடித்து அழுத்தி எந்த திரையிலும் நகற்றி ஜாய்ஸ்டிக் கருவியை பயன்படுத்திக் கொள்ளலாம் இந்த கருவி பெரும்பாலும் வீடியா கேம்ஸ் விளையாட பயன்படுத்தப்படுகிறது கணினியில் இயக்கங்களை தன்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதால் இதனை இயக்குபிடி என அழைக்கிறார்கள்.

Internet கணினிகள் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டு செயல்படுத்தும் முறையை நெட்வோர்க்கிங் என அழைக்கப்படுகிறது இதனை மாவட்ட, மகாண, நாடுகள் கண்டங்கள் அளவில் எங்கிருந்தாலும் கணினியை தொலைபேசி இணைப்பு மூலமாக இணைத்து செயலாற்றுவதால் இன்டர் நெட் என அழைக்கப்படுகிறது ஆஸ்திரேலியாவிலிருந்து www.tamil.net என்ற இணையம் கடந்த ஐந்து ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகிறது.



தமிழர்கள் உலக அளவில் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவே இந்த இன்டர் நெட் தளம் துவக்கப்பட்டது. இந்த தளத்தில் தான் இன்டர் நெட்டுக்கான தமிழ் சொல் இணையம் என்பது உருவாகியது. தகவல்களை சேமிக்கவும் பரிமாற்றம் செய்யவும் இணைய தளங்கள் பயன்படுகிறது. Modem மொடியூலேட்டர், டிமொடியூலேட்டர் ஆகிய சொற்றகளின் முதல் இரு சொற்களைக் கொண்டு உருவானதே மோடம் என்ற சொல் ஆகும்.

(Modulator + Demodulator + Modum) கணினியில் தொகுக்கப்படும் சொல்லாக்கங்களை (கணினி சிக்னல்களை) தொலைபேசி சிக்னல்களாக மாற்றி பிற கணினியில் பயன்படுத்த இவ் உபகரணத்தை கணினியில் உள்ளேயோ அல்லது வெளியேயோ கூட பொருத்திக் கொள்ளலாம். நாம் பயன்படுத்தும் கணினி தொலைபேசியை பிற கணினியுடன் இணைக்க பயன்படுவதால் இதனை தமிழில் இணக்கி என அழைக்கிறார்கள். ஆனால் கலைச் சொல்லாக்க விதிகளின் படி இந்நூலில் மோடம் என்றே குறிப்பட்டுள்ளோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்ப்யூட்டர் ஹார்ட்வெயார்
Computer Hardware

கணினிப் பாகங்கள் :

வேர்ச்சுவல் ப்ளொப்பி

இன்டர் நெட் வருகையினால் கம்ப்யூட்டர் பயன்பாட்டாளர்கள் எண்ணிப்பார்க்க முடியாத பயன்களை அடைந்து வருகின்றார்கள் என்றே சொல்லவேண்டும். நாம் உருவாக்கும் கம்ப்யூட்டர் டேட்டாஸ் மற்றும் கிராபிக்ஸ், அக்கவுண்ட் டேட்டா போன்றவற்றை சேமித்துக்கொள்வதற்காக ப்ளொப்பியை பயன்படுத்தி வருகிறோம்.

ஒரு கம்ப்யூட்டரிலிருந்து மற்றோரு - தொலை தூரத்திலிருக்கும் கம்ப்யூட்டர்களுக்கு ஃபைல்களை ப்ளொப்பிகள் மூலம் கொப்பி செய்யப் பயன்படுத்துகிறோம். அப்படி நாம் பயன்படுத்தும் ஃபைலின் அளவு பெரிதாக இருக்குமானால், பல ப்ளொப்பிகளில் கொப்பி செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

இந்த ப்ளாப்பி பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்காகவே இன்டர் நெட் மூலம் வேர்ச்சுவல் ப்ளொப்பி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்த ப்ளொப்பி கண்ணுக்குத் தெரியாது. என்றே சொல்லலாம். அதாவது பலதரப்பட்ட வேர்ச்சுவல் ப்ளொப்பிகள் இன்டர் நெட்டில் உருவாக்கப்பட்டுள்ளன. நமக்குத் தேவையான வேர்ச்சுவல் ப்ளொப்பியில் நமது ஃபைல்களை சேமித்து வைத்துக் கொள்ளலாம். 3 எம்.பி முதல் 20 எம்பிக்கள் வரை ஃபைல்களை சேமித்து வைக்கக் கூடிய திறன் கொண்ட வேர்ச்சுவல் ப்ளாப்பிகள் இணையத்தில் உள்ளன.

இந்த வேர்ச்சுவல் ப்ளொப்பிகள் இலவசமாக பயன்படுத்திக் கொள்ளலாம். இதில் imac floppy என்பதும் ஒரு வேர்ச்சுவல் ப்ளொப்பிதான்.

இதில் 3 எம்.பி அளவு கொண்ட பைல்களை பாஸ்வேர்ட்டுகள் கொடுத்து சேமித்து வைத்துக் கொள்ளலாம். இந்த பைல்களை அனுமதியில்லாதவர்கள் யாரும் உபயோகிக்க முடியாது.

இந்த வேர்ச்சுவல் ப்ளொப்பியை பெற என்னவெல்லாம் வேண்டும் என்கிறீர்களா? நீங்கள் இன்டர் நெட் இணைப்பு பெற்றிருந்தாலே போதுமானது. இந்த ப்ளொப்பி முறை சேமிப்பை மெக்கின்டோஷ் மற்றும் பிசி பயன்படுத்தும் இருவருமே பயன்படுத்தலாம்.

இந்த வேர்சுவல் ப்ளொப்பியை 10 எம்.பி 20 எம்.பி வரை சேமிக்கக் கூடியவாறு மை ரோக் ஒன்லைன் இலவசமாகவே செல்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இது வர்த்தகம் செய்பவர்களுக்கு மட்டுமல்ல மாணவர்களுக்கும் ஒரு வரப்பிரசாதமே.

கொம்பக் டிஸ்க்

கம்ப்யூட்டர் மூலம் நாம் உருவாக்கும் புரோக்கிராம்கள், தகவல்கள் ஃபைல்களாக சேகரிக்கப்படுகிறன. இந்த பைல்கள் பத்திரமாக பாதுகாக்கப்பட வேண்டுமானால் அதற்கு டிஸ்க்குகள் தேவை. இந்த டிஸ்குகள் அனைத்தும் காந்தவழி பதிபவை இல்லை. லேசர் வழி தொழில் நுணுக்கத்தை மட்டுமே பயன்படுத்தி வடிவமைக்கப்பட்டவையும் உண்டு. பொதுவாக கொம்பக் டிஸ்க்குகளை எடுத்துக் கொண்டால், முதலில் வந்த கொம்பக் டிஸ்க்குகளில் இருந்து தகவல்களைப் பெற மட்டுமே முடியும் ; பதிய முடியாது.

ஆனால், தற்போது பதியக்கூடிய சி.டி டிரைவ்கள்

பயன்பாட்டிற்கு வந்துவிட்டன. இவை ஊதா மற்றும் பச்சை வண்ண பொலிமர் பூச்சுகளுடன் வெளிவருகின்றன. சி.டி.ஆர் டிரைவில் உள்ள லேசர் ஒளிக்கற்றை இந்த வண்ணத்தை மாற்றி நான்கு டிஜிட்டல் முறையில் தகவல்களாகப் பதிகிறது.

ஆனால், ஒரு தடவை மாற்றப்பட்ட வண்ணம் அப்படியே அமைந்துவிடும். மீண்டும் மாற்ற முடியாது. அதாவது ஒரு தடவைதான் எழுத முடியும். மீண்டும் அதனை அழித்து எழுத முடியாது.

ஆனால் தற்போது டிஸ்க்கில் எழுதியதை அழித்து எழுதக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய சிறப்பு டிரைவ்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் கொம்பக் டிஸ்க் (சி.டி) கம்ப்யூட்டர் உபயோகத்தில் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது.

கம்ப்யூட்டர் நினைவகம்

மனிதனை இயக்கும் மூளையைப் போன்று, கம்ப்யூட்டரை இயக்குவதற்கு கம்ப்யூட்டரின் மூளை என்று அதன் நினைவகத்தைக் குறிப்பிடுவது பொருத்தமாகும். இந்த நினைவகம் என்று குறிப்பிடும் மெமரி, எல்லா வகை கம்ப்யூட்டர்களிலும் அடிப்படைத் தேவையாகும்.

பல செயல்களைச் செய்ய மைக்ரோ புரோசசருக்கு நினைவகம் தேவைப்படுகிறது.

மைக்ரோ புரோசசர் என்பது பல ஆயிரம் டிரான்சிஸ்டர்களை உள்ளடக்கியதாகும். டேட்டா போன்றவற்றை தற்காலிகமாக எழுதி வைக்க நினைவகம் தேவை. இந்த நினைவகம்தான் கம்ப்யூட்டரை இயங்கச்செய்கிறது.

இந்த நினைவகங்களை ஐந்து வகைகளாகப் பரிக்கலாம். அவை- அடிப்படை நினைவகம், மேல் நிலை நினைவகம், உயர்நிலை நினைவகம், விரிவான நினைவகம், விரிவாக்கம் செய்யப்பட்ட நினைவகம் என்பவையாகும்.

மேற்சொன்ன அனைத்து நினைவகப் பிரிவுகளும் எல்லா கம்ப்யூட்டர்களிலும் இருக்கும் என்று சொல்ல முடியாது. இந்த நினைவகங்கள் கம்ப்யூட்டர்களின் வகைகளுக்கேற்ப சில அல்லது அனைத்தும் இணைக்கப்பட்டிருக்கலாம்.

ஆரம்பகாலத்தில் கம்ப்யூட்டர்களில் அதிகப்படியாக 640k அளவு நினைவம் இருந்தது. அப்போது நாம் பயன்படுத்திய சாதாரண கம்ப்யூட்டரான எக்ஸ்டியில் 1 MB நினைவகம் இருந்தது. இதில் 640k நினைவகம் - பயன்படுத்துபவர்களின்



பயனுக்காக இருந்தது. இதுதான் அடிப்படை நினைவம் என்று அழைக்கப்படுகிறது. மீதமுள்ள 384 k நினைவகம் கம்ப்யூட்டரின் பயன்பாட்டுக்காக பயன்படுத்தப்பட்டு வந்தது. இதுவே மேல் நிலை நினைவகம் என்று அழைக்கப்படுகிறது.

அதிக முன்னேற்றங்களை கண்டுள்ள இந்த கம்ப்யூட்டர் காலத்தில் உருவாக்கப்பட்டுவரும் கம்ப்யூட்டர்களுக்கு அதிகப்படியான நினைவகம் தேவைப்படுகின்றது.

டிஜிட்டல் வீடியோ டிஸ்க் (டிவிடி)

கம்ப்யூட்டரில் நாம் உருவாக்கும் புரோகிராம்கள் மற்றும் சொப்ட்வெயர்கள், ஒளி - ஒலி தகவல்கள் பதிந்து கொள்வதற்கு தகவல் சேமிப்புக்காக லேசர் தொழில் நுட்பத்துடன் தற்பொழுது வெளிவந்திருப்பதுதான் டிஜிட்டல் வீடியோ டிஸ்க் (DVD) அல்லது டிஜிட்டல் வெர்சடைல் டிஸ்க். இது 1928 ஆம் ஆண்டு ஜான்ட் லாக்கிபோர்ட் என்பவரால் உருவாக்கப்பட்டது.

1978 இல் பிலிப்ஸ் நிறுவனம் லேசர் விஷன் என்ற தொழில் நுட்பத்தை தகவல் தொடர்புக்காக பயன்படுத்தியது. தற்போதைய கம்ப்யூட்டர் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் டிவிடி அமைந்துள்ளதால், மக்கள் மத்தியில் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

இந்த டிவிடி 0.6 மிமீ அளவு தடிமனாக இருக்கும் இதன்

கொள்ளளவு தகவல்களை 4.7 GB முதல் 17 GB வரை சேமித்து வைக்கமுடியும்.

தற்போது வெளிவந்துள்ள டிவிடியில் இருபுறமும் தகவல் சேமித்துவைக்கப்பட்டு உள்ளதாக இருக்கும் இந்த டிஸ்க்குகளை 3x சிடி-ரொம் டிரைவில் பயன்படுத்தலாம். இதன் மூலம் ஒரு செக்கனில் 1.3 GB தகவல்களைப் படிக்க முடியும்.

DVD தட்டை நமது கம்ப்யூட்டரில் இயக்கவேண்டுமானால் குறைந்தது 4 MB ஹார்ட் டிஸ்க், 16 MB RAM நினைவகம் மற்றும் 90 மெகாஹெட்ஸ் வேகம் கொண்ட பென்டியம் புரோசசர் போன்று இருக்கவேண்டும்.

டிவிடி ரெக்கோர்டிங் (DVD -R) தட்டில் ஒரு முறை எழுதப்படும் தகவல்களை மீண்டும் அழித்து வேறு தகவல்களை எழுதமுடியாது.

ஆனால் DVD ROM வகை தட்டுகளில் எத்தனை முறை வேண்டுமானாலும் அழித்து எழுத முடியும்.



கம்ப்யூட்டர் டுடே தொழில் வங்கி
கம்ப்யூட்டர் டுடே வாசகர் வட்டம்
விண்ணப்பப் படிவங்கள் 36ஆம் பக்கத்தில்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது
விற்பனையில்......

ஆங்கிலம் ~ தமிழ் ~ ஆங்கிலம்

CD அகராதி

விரைவில்....



எதுமாதிரியும் இல்லாத புதுமாதிரியான கட்டுரைத் தொடர்!

CD வடிவில் வெளிவரும் முதலாவது தமிழ் கணினி மின்னிதழ்

சகல தொடர்புகளுக்கும்:

011 2 362112

இப்பொழுது விற்பனையில்.....

நிலவு.com
இதயம் குளிரும் இணையம்
www.nilavu.com

கம்ப்யூட்டர் info

Computer Info

கணினி — இணையம் — நுட்பம்

தமிழில் முதல் கணினி மின்னிதழ்

Contact:
Nilavu.com, 4c 6 - 1/1,
Fussels Lane,
Colombo - 06.
T.P.: 011 2 362112

Computer Info First Computer e - Magazine

இதயம் குளிரும் இணையம்

சந்தாதாரர்களுக்கு விசேட சலுகைகள்!

கம்ப்யூட்டர் ருடே இற்கு நீங்களும் ஆக்கங்களை எழுதி அனுப்பலாம்.

தகவல் தொழில்நுட்பத் துறையில் அனுபவம் உள்ளவர்கள் - புதியதகவல்கள், துணுக்குகள், கட்டுரை, சிறுகதை, கவிதைகள், தொழில் நுட்பச்செய்திகளை எமக்கு எழுதி அனுப்பலாம். நீங்கள் அனுப்பும் ஆக்கங்கள் ஆசிரியர் குழுவால் பரிசீலிக்கப்பட்டு பிரசுரிக்கப்படும்.

* நீங்கள் அனுப்பும் ஆக்கங்களுக்கான படங்களை Floppy இல் அனுப்புதல் வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

Computer Today,
No. 4C6 - 1/1, Fussels Lane,
Colombo - 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்ப்யூட்டர் ருடே வாசகர் வட்டம் ஒன்றை உருவாக்கும் முகமாக வாசகர்களது விபரங்களைச் சேகரிக்கத் திட்டமிட்டிருக்கின்றோம்.

ஒவ்வொரு இதழிலும், வாசகர் வட்ட உறுப்பினர்களது விபரங்களைப் பிரசுரித்து, வாசகர்களுக்கிடையேயான ஆரோக்கியமான நட்பை உருவாக்கி - தகவல் தொழில்நுட்பப் பரிமாற்ற வலை ஒன்றைக் கட்டி எழுப்புவதே இந்த வாசகர் வட்ட உருவாக்கத்தின் நோக்கமாகும்.

வாசகர் வட்டத்தில் உறுப்பினர்களாவதற்குரிய விண்ணப்பப் படிவம் கீழே பிரசுரமாகியுள்ளது.

அதனைப் பூர்த்திசெய்து அனுப்பி வைத்து உங்களையும் கம்ப்யூட்டர் ருடே வாசகர் வட்ட உறுப்பினராக்கிக் கொள்ளுங்கள்!

கம்ப்யூட்டர் ருடே வாசகர் வட்டம்

உறுப்பினர் விண்ணப்பப் படிவம்

முழுப் பெயர் :..

முகவரி :..

வயது :................... பிறந்த திகதி :............................

பாடசாலை / தொழில், முகவரி :...................................

தேசிய/தபால்/பாடசாலை அடையாளஅட்டை இல :
....

தொலைபேசி இல :..
மின்னஞ்சல் :..
இணைய முகவரி :..

தகவல் தொழில்நுட்பத்துறை (IT) யில் ஆர்வமுள்ள வகுதிகள் :..

வேறு துறையில் ஆர்வங்கள் :..

பொழுது போக்கு :..

குறிப்பு :

மேலுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும், அவற்றையும் புகைப்படம் இணைக்கப்பட்டிருப்பின் அதனையும் **கம்ப்யூட்டர் ருடே**யில் பிரசுரிப்பதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

....
திகதி. விண்ணப்பதாரியின் ஒப்பம்.

உறுதிப்படுத்தல்

மேலுள்ள விபரங்கள் யாவும் நான் அறிந்த வரையில் உண்மை எனவும், விண்ணப்பதாரியை தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

....
பதவி முத்திரை உறுதிப்படுத்துபவர் ஒப்பம்.

....
திகதி

கம்ப்யூட்டர் ருடே தொழில் வங்கியில் உங்கள் தனிப்பட்ட, நிறுவன விபரங்களைப் பிரசுரிப்பதற்குரிய விண்ணப்பப்படிவங்கள் கீழே பிரசுரமாகியுள்ளன. அவற்றைப் பூர்த்திசெய்து அனுப்பி வைத்து உங்கள் விபரங்களையும் பதிவுசெய்து பயன்பெறுங்கள்.

கம்ப்யூட்டர் ருடே தொழில் வங்கி

தொழில் வாய்ப்புத் தேடுவோருக்கு

முழுப் பெயர் :..

வயது :..

பிறந்த திகதி :......................................
தேசிய அடையாள அட்டை இல :..................................

கல்வி கற்ற பாடசாலை :..
கல்வித் தகுதி :..
தொழில் அனுபவம் :..
எதிர்பார்க்கும் தொழில்/ பதவி :..

தொலைபேசி இல :..
மின்னஞ்சல் :..
இணைய முகவரி :..
ஆர்வம் :..
மேலுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும், அவற்றைக் **கம்ப்யூட்டர் ருடே**யில் பிரசுரிப்பதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

....
திகதி. விண்ணப்பதாரியின் ஒப்பம்.

கம்ப்யூட்டர் ருடே தொழில் வங்கி

வெற்றிடம் கொண்டுள்ள நிறுவனங்களுக்கு

நிறுவனம் :..

முகவரி :..

பதவி/தொழில் வெற்றிடம் :..

வயது எல்லை :..
எதிர்பார்க்கும் தொழில் அனுபவம் :..............................

உறுதிப்படுத்தல்

எமது நிறவனம் சார்பாக நாம் மேலே கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும், அவற்றை பிரசுரிப்பதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

....
பதவி முத்திரை அதிகாரியின் ஒப்பம்.

....
திகதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'CD அதிர்ஷ்டம்'

'கம்ப்யூட்டர் ருடே' வாசகர்களுக்கு மட்டும் - CD இலவசம்

கடந்த இதழில் வெளியான பரிசுக் கூப்பனை பூர்த்திசெய்து அனுப்பிவைத்த ஆயிரக்கணக்கான வாசகர்களிலிருந்து பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களது பெயர் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவர்களுக்குரிய CDக்கள் விரைவில் அனுப்பி வைக்கப்படும்.

எம்.என்.அமீர்,	-மல்வான	வ.தினேஸ்,	-கல்கிஸ்ஸ.
என்.ஷபீதா,	-சம்மாந்துறை.	ஜ.சனாஸ்,	-கம்பகா
அ.அன்ரனி,	-புத்தளம்	நி.நிரோஷன்,	-வெலிமட
சே.க.அஸ்ரப்,	-மஸ்கெலியா	ஐ.லாவன்யா,	-வெள்ளவத்தை
மு.தவேந்திரன்,	-பருத்தித்துறை	கி.தேவானந்தா,	-முறிப்பு
ந.கஜேந்திரன்,	-தலைமன்னார்.	எஸ்.தவரூபன்,	-வவுனியா.
தி.கார்த்திகா,	-வவுனியா	க.வனஜா,	-கிளிநொச்சி.
எம்.நவாஸ்,	-சம்மாந்துறை.	கு.மகேஸ்வரன்,	-கிளிநொச்சி.
க.சுகந்தி,	-முருங்கன்	ப.ஜயசூரிய,	-களுத்துறை
கோ.செந்தில்குமார்,	-தெமடகொட	ந.நவாஷ்,	-கட்டார்

'CD அதிர்ஷ்டம்' - 6

* நீங்கள் செய்யவேண்டியது இதுதான்!

கீழுள்ள கூப்பனை தெளிவாக பூர்த்தி செய்து எமது முகவரிக்கு அனுப்பவும்.

* போட்டோப் பிரதி போன்ற நகல் கூப்பன்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

* அதிர்ஷ்டசாலி வாசகர்களுக்கு இலவசமாக மென்பொருள் CDகிடைக்கும்.

* சந்தாதாரர்களுக்கு அதிர்ஷ்ட வாய்ப்பு இருமடங்கு. (எனவே சந்தா எண்ணையும் குறிப்பிட்டு அனுப்பவும்.)

முகவரி : *Computer Today, No. 4C6 - 1/1, Fussels Lane, Colombo - 06 , Sri Lanka.*

இங்கே கத்தரிக்க

கம்ப்யூட்டர் ருடே கம்ப்யூட்டர் ருடே கம்ப்யூட்டர் ருடே கம்ப்யூட்டர் ருடே

CD அதிர்ஷ்டம் ! **6**

பெயர்: ....

முகவரி: ....

....

....

Tel :..

E.mail: ....



சந்தா எண்(இருப்பின்) : ....

*'CD அதிர்ஷ்டம் 2004 - 06' என்று குறிப்பிட மறவாதீர்கள்.

....

திகதி கையொப்பம்

கம்ப்யூட்டர் ருடே கம்ப்யூட்டர் ருடே கம்ப்யூட்டர்



உடனே இணையுங்கள்

உங்கள் வீட்டு / அலுவலக வாசலிலேயே **'கம்ப்யூட்டர் ருடே'** ஐ பெற்றுக் கொள்ள இன்றே சந்தாதாரராக இணைந்து கொள்ளுங்கள்.

மாதிரிப்படிவம்

'கம்ப்யூட்டர் ருடே'

சஞ்சிகையை நான் மாதாமாதம் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். அதற்கான கட்டணமாக

ஒரு வருடம்	- ரு	360	☐
இரண்டு வருடம்	- ரு	720	☐
மூன்று வருடம்	- ரு	1080	☐

ரூபாவை இத்துடன் இணைத்து அனுப்புகிறேன்.

பெயர் : ....

....

முகவரி : ....

....

....

☎ இல : ....

மின்னஞ்சல் : ....

நான் இத்துடன் ....

.... இலக்க காசோலையை / காசுக்கட்டளையை **'Nilavu.com'** என்ற பெயருக்கு அனுப்பி வைக்கிறேன்.

....

கையொப்பம்

பணத்தைக் காசோலையாகவோ, காசுக் கட்டளையாகவோ **'Nilavu.com'** என்ற பெயருக்கு அனுப்பிவைக்கவும்.

காசுக் கட்டளைகளை வெள்ளவத்தை தபாலகத்தில் மாற்றத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

வெளிநாட்டு வாசகர்களுக்கான சந்தாப்படிவம் மறுபக்கத்தில்

MAIL COUPON TO:

'Computer Today'
No. 4C6 - 1/1,
Fussels Lane,
Colombo - 06 , Sri Lanka.
e-mail: comt@yarlonline.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உடனே இணையுங்கள்

உங்கள் வீட்டு / அலுவலக வாசலிலேயே **'கம்ப்யூட்டர் ருடே'** யைப் பெற்றுக்கொள்ள இன்றே சந்தாதாரராக இணைந்துகொள்ளுங்கள்.

மாதிரிப்படிவம்

'கம்ப்யூட்டர் ருடே'

சஞ்சிகையை நான் மாதாமாதம் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். அதற்கான கட்டணமாக

- மூன்று மாதம் - $ 3 ☐
- ஆறு மாதம் - $ 6 ☐
- ஒரு வருடம் - $ 12 ☐
- இரண்டு வருடம் - $ 24 ☐
- மூன்று வருடம் - $ 36 ☐

அமெரிக்க டொலரை அல்லது அதற்குச்சமமான பணத்தினை இத்துடன் இணைத்து அனுப்புகிறேன்.

Name : ....
....

Address : ....
....

City : ....

Country : ....

☎No : ....

E-mail : ....

☐ I enclose Cheque

No :

Drawn on :

For :

I agree to the terms and conditions.

....

Signature and Date

காசோலையை **'Nilavu.com'** என்ற பெயருக்கு அனுப்பி வைக்கவும்.

உள்நாட்டு வாசகர்களுக்கான சந்தாப்படிவம் முன்பக்கத்தில்

MAIL COUPON TO:

'Computer Today'

No. 4C6 - 1/1,

Fussels Lane,

Colombo - 06 , Sri Lanka.

e-mail:comt@yarlonline.com



நான் ஒரு கணினி நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன் **"கம்ப்யூட்டர் ருடே"** இதழ் மூலம் பயனடையும் வாசகர்களில் நானும் ஒருவன். கணினி அறிவியலை அனைத்துத் தரப்பினரும் பயனடையும் வகையில் வெளியிடுவது சிறப்பு.

ந.ரவிக்குமார்,
கண்டி.

இன்றுள்ள தமிழ் கம்ப்யூட்டர் சஞ்சிகைகளில் **"கம்ப்யூட்டர் ருடே"** வித்தியாசமான முறையில் புதிய பல அரிய தகவல்களை வழங்குகின்றது.

அதிலும் இணையத்தில் இறக்கியவை என்ற பகுதி என் கண்ணைக் கவர்ந்திருக்கின்றது. உங்கள் பணி தொடர எனது வாழ்த்துக்கள்.

ம.ராஜினி,
வவுனியா.

கடந்த ஒரு ஆண்டு காலமாக **"கம்ப்யூட்டர் ருடே"** படித்து வருகிறேன் இதில் வரும் GIT தகவல் தொழில்நுட்ப கிருத்தியம் என்ற பாடப்பரப்பு மாணவர்களாகிய எமக்கு பயன் உள்ள தொடர். தமிழில் இடம் பெறும் விளக்கங்கள் புரிதலை எளிமையாக்குகின்றன.

எம்.ஹாசீம்,
மாவனல்ல.

"கம்ப்யூட்டர் ருடே" இதழைத் தொடர்ந்து படித்து வருகின்றேன் எல்லோருக்கும் புரியும் வகையில் எளிமையாக உள்ளது. பாராட்டுக்கள். புதுப் பொலிவுடன் புதிய பகுதிகள் வருவதை வரவேற்கிறோம்.

தி.ஜெனார்த்தனன்,
மதுரங்குழி.

"கம்ப்யூட்டர் ருடே" இதழ் வெளிவருவது கடந்த சில மாத காலமாக தடைப்பட்டுள்ளது.

அதனை சீர் செய்து வாசகர்களாகிய எமக்கு தொடர்ந்து சீராகத் தர முயற்சிக்கவும். எமது ஆதரவு உங்களுக்கு என்றும் உண்டு.

தே.ஜெனிற்றா.
மட்டக்களப்பு.

எமது ஊருக்கு **"கம்ப்யூட்டர் ருடே"** சஞ்சிகை மிகவும் தாமதமாகவே கிடைக்கின்றது. நாங்கள் பாடசலை செல்லும் மாணவர்கள் என்பதால் எங்கள் எங்கள் ஆக்கங்களை தயார் செய்வது கடினமாகவுள்ளது. எனவே சஞ்சிகையை வேகமாக அனுப்பி எங்கள் ஆவலைப் பூர்த்தி செய்யுமாறு வேண்டுகின்றோம்.

எம்.எம்.ரிஸ்வி.
காத்தான்குடி

நீங்கள் தரும் ஒவ்வொரு தொடரும் நன்றாகவே உள்ளன. அவற்றை தொடர்களாக எண்ணி எரிச்சலடையச் செய்யாமல் ஒவ்வொரு பகுதியினையும் தேர்ந்தெடுத்து விளக்கமாகவும் தெளிவாகவும் ஒவ்வொரு புத்தகத்திலும் தருவது வாசகர்களாகிய எங்களுக்கு ஓர் வரப்பிரசாதமே.

வ.சுதன்,
வெள்ளவத்தை.

தற்போது **"கம்ப்யூட்டர் ருடே"** வருகை மிகத் தாமதமாகவே உள்ளது அது மன வருத்தத்தைத் தந்தாலும் காலந் தாள்ளியாயினும் எம்கையில் கிடைப்பது மகிழ்ச்சியாகவே உள்ளது. எ

னினும் சிறிது துரிதமாக கிடைக்க வழி செய்யவும்.

வி.தயாநிதி,
குருநாகல்.

உங்களது விமர்சனங்களே எமது சஞ்சிகையை மேலும் வளப்படுத்தும். எனவே சஞ்சிகையை வாசித்ததும் உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்ப மறவாதீர்கள்!

Inbox

'Computer Today'

No.4 C 6- 1/1, Fussels Lane,

Colombo - 06.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிஸ்டர் மெமறி பதில்கள்

நிஸ்வினா,
புத்தளம்.

Windows NT என்பது நெட்வோர்க் சிஸ்டமா?

இது ஒரு நெட்வோர்க் ஒப்பிரேட்டிங் சிஸ்டம். பல கம்ப்யூட்டர்களை இணைத்து விலை உயர்ந்த லேசர் பிரிண்டர் போன்ற சாதனங்களை பங்கிட்டு கொள்வதற்காக உருவான கட்டமைப்பை Lan: Local Area Network என்பர். அதாவது லான் என்பது கம்ப்யூட்டர் நெட்வோர்க் ஆகும். இந்த இந்த நெட்வோர்க்கை இயக்க ஒரு ஒப்பரேட்டிங் சிஸ்டம் தேவை.

நெட்வோர்க்கிற்கான ஒப்பிரேட்டிங் சிஸ்டத்தை NOS (Network operating system) என்பர். நொவல் நிறுவனத்தின் நெட்வேயார் (Netware) என்ற நெட்வோர்க் ஒப்பிரேட்டிங் சிஸ்டம் உலக அளவில் பிரசித்தி பெற்றிருந்தது. இப்போது அந்த இடத்தை மைக்ரோசொ.'.ப்ட்டின் விண்டோஸ் NT பிடித்துக் கொண்டிருக்கிறது.

தினேஸ்,
வத்தளை.

நெட்வோர்க் அமைப்பில் உள்ள கம்ப்யூட்டர்களில் வைரஸ் நுழைய வாய்ப்பு உள்ளதா?

வாய்ப்பு உண்டு. எனவேதான் நெட்வோர்க்கிற்கான வைரஸ் நீக்கிகளை பைல் சேர்வரில் நிறுவ வேண்டும்.

கிருஸ்ணகாந்தன்,
கண்டி.

எக்ஸெலில் பல கணக்குகளைச் செய்யவேண்டியுள்ளது. 45067 என்று ரைப் செய்தால் 450.67 எனவும் 123456 என் டைப் செய்தால் 1234.56 எனவும் எக்ஸெல் மாற்ற வேண்டும். அதாவது, நான் டைப் செய்யும் எண்களின் கடைசி இரண்டு இலக்கங்களும் சதமாகவும் மீதமுள்ளவை ரூபாயாகவும் இருக்க வேண்டும். டெசிமல் புள்ளி இல்லாமல் நான் டைப் செய்ய வேண்டும் எக்ஸெலில் வசதி உள்ளதா?

நிச்சயமாக உள்ளது.

நீங்கள் செய்ய வேண்டியவை இவைதான். முதலில்-

Tool -> Options ஆகியவற்றைக் கிளிக் செய்யுங்கள்.

Edit கட்டளையை கிளிக் செய்யவும். அதில் உள்ள Fixed Decimal என்பதை தேர்வு செய்து Places என்பதில் 2 என்ற எண்ணைக் கொடுங்கள். பின்னர் OK பட்டனை கிளிக் செய்யுங்கள்.

தேவையான மேலதிக தெரிவுகளையும் நீங்கள் செய்துகொள்ளலாம்.



இரத்தினபுரி,
ஏ.அவினாஷ்.

எனது கணினியில் A ட்ரைவ் வழியாக பூட்டிங் செய்து C ட்ரைவிற்குச் செல்ல முடிவது போல் C ட்ரைவ் வழியாக பூட்டிங் ஆக என்ன செய்ய வேண்டும்?

கணினி பூட்டானதும் நினைவகப் பரிசோதனை இடம்பெறுவதற்கு அடையாளமாக கணினித்திரையில் எண்கள் வேகமாக ஓடிக்கொண்டிருக்கும், அவ்வேளையில் 'Delete' கீயை அழுத்தி செட்டப்பிற்குச் செல்லவும். அதில் வரும் Advance CMOS Setup A:C என்றிருப்பதை C:A என்று மாற்றிவிடுங்கள்.

இனி உங்கள் கணினி C ட்ரைவ் வழியாக பூட் ஆகும்.



உங்கள் கேள்விகளுக்கும் மிஸ்டர் மெமறி பதிலளிப்பார்... உங்கள் கேள்விகளை விரைந்து அனுப்புங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் முதலாவது தமிழ் கணினிச் சஞ்சிகை

தகவல் தொழில்நுட்பத்தின் சகல பரிமாணங்களையும் வாசர்களின் பார்வைக்குக் கொண்டுவரும் சஞ்சிகை

இலங்கை முழுவதும், உலகில் தமிழ் பேசுவோர் வாழும் இடமெங்கும் பல்லாயிரக்கணக்கான பிரதிகள் விற்பனையாகும் கணினிச் சஞ்சிகை

முழுக்குடும்பமுமே வாசித்துப் பயனடையக்கூடிய சஞ்சிகை

இப்படியொரு கணினிச் சஞ்சிகையில்தானே உங்கள் விளம்பரமும் இடம்பெறவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?

அழையுங்கள் :

011 2 362112

25ஆம் பக்கத் தொடர்ச்சி...

தனக்கே உரிய 'டொஸ்' சிஸ்டத்தை 'நாவெல் டொஸ்' என்ற பெயரில் வெளியிட்டது. உலகத்தின் சில மூலைகளில் பிசி டொஸ் 7.0 நாவெல் டொஸ் 7.0 மற்றும் டிஆர் டொஸ் ஒப்ப ரேட்டிங் சிஸ்டங்களைப் பயன்படுத்துப வர்கள் இருக்கவே செய்கிறார்கள்.

பல ஆண்டுகளுக்குப் பிறகும் அவை புதுப்பிக்கப்படவில்லை.

மைக்ரோசொ.'.ப்ட் எம்எஸ் டொஸ் 6.22 க்குப் பிறகு புதிய பதிப்பினை வெளியிடவில்லை.

எம்எஸ் டொஸ் 7.0 உருவாக்கப் பதிப்பினையும் வெளியிடவில்லை. எம் எஸ் டொஸ் 7.0 உருவாக்கப்பட்ட போதும் அது தனியான ஒப்பரேட்டிங் சிஸ்டமாக வெளியிடப்படாமல், 'விண் டோஸ் 95' ஒப்பரேட்டிங் சிஸ்டமாக வெளியிடப்படாமல், 'விண்டோஸ் 95' ஒப்பரேட்டிங் சிஸ்டத்தின் ஓர் அங்கமாக இணைக்கப்பட்டது.

எத்தனையோ வடிவங்களில் 'டொஸ்' ஒப்பரேட்டிங் சிஸ்டங்கள் உலா வந்த போதும் மைக்ரோசொ.'.ப்டின் டொஸ் சிஸ்டமே போட்டியில் வென்றது எனலாம்.

1985 ஆம் ஆண்டு முதற் கொண்டே டொஸ் என்றாலே அது மைக்ரோசொ.'.ப்டின் 'டொஸ்' சிஸ்டத்தைக் குறிப்பிடும் சொல்லாகவே நிலைபெற்று விட்டது.

தொகுப்பு:
என்.சி.குமரன், யாழ்ப்பாணம்.

டொஸ் பதிப்பு	வெளியீடு
1.0	1981 ஒகஸ்ட்
1.1	1982 ஒக்டோபர்
2.0	1983 மார்ச்
2.1	1983 நவம்பர்
3.0	1984 ஓகஸ்ட்
3.1	1984 நவம்பர்
3.2	1986 ஜனவரி
3.3	1987 ஏப்ரல்
4.0	1988 ஜூலை
5.0	1991 ஜூன்
6.0	1993 மார்ச்
6.2	1994 செப்டெம்பர்
6.21	1994 பெப்ரவரி
6.22	1994 ஜூன்



உங்கள் இதழில்...



ஜூனியர்

கம்ப்யூட்டர் ருடே

சின்னஞ்சிறிய கணினி வல்லுநர்களுக்காக...

உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

உங்கள் கேள்விகளுக்கு -

மெமறியிடம் கேளுங்கள்!

தகவல் தொழில்நுட்பம் சார்ந்த உங்கள் கேள்விகளுக்குப் பதில் அளிப்பதற்குத் தயாராக இருக்கிறார் மிஸ்டர் மெமறி !

உங்கள் கேள்விக்கணைகள் வந்துசேர வேண்டிய முகவரி :

'மெமறியிடம் கேளுங்கள்', கம்ப்யூட்டர் ருடே,

No. 4C6 - 1/1, Fussels Lane, Colombo - 06 .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லூடக குறுவட்டுக்கள்

நிலவு.com
இதயம் குளிரும் இணையம்
www.nilavu.com
A Member of Dream Solutions (Pvt) Ltd.

வெளியீடுகள்

கம்ப்யூட்டர் info
கணினி - இணையம் - நுட்பம்

4C6 1/1, Fussels Lane,
Colombo - 06,
Sri Lanka.
T.P : 0112 362 112

275, யாழ் வீதி,
மானிப்பாய்,
யாழ்ப்பாணம், இலங்கை.
தொ.பே : 0777 740413

இப்பொழுது விற்பனையில்

email : sales@nilavu.com

தமிழ் மொழி மூல கற்றலுக்கான பல்லூடக குறுவட்டுக்கள் நாடெங்கும் விற்பனையில் உள்ளன.

நேரடியாக அல்லது தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு - 0112 362 112

நாடு முழுவதும் விற்பனையாளர்களும் விநியோகஸ்தர்களும் தேவை

இலங்கையில் பல்லூடககுறுவட்டுக்களின் முன்னோடிகள்

-- The King of Multimedia --

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org